யாழ்ப்பாணம

பக்கங்கள் பத்து

விலை ரூபா 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 07 வெள்ளிக்கிழமை (22-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 03

லாலாசோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்

பகலோன் ஸ்ரோர்ஸ்
334, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

டிசம்பர் 24 நள்ளிரவு முதல்; ஜனவரி 24 நள்ளிரவு வரை
நல்லெண்ண வெளிப்பாடாக

# ஒரு மாதகால யுத்த நிறுத்தத்திற்கு புலிகள் தலைவர் பிரபா அறிவிப்பு!

## படைகளை தாக்கவேண்டாமென உத்தரவு

(வவுனியா விசேட நிருபர் விவேகராசா)

நீண்ட காலமாக நடைபெற்று வரும் இனயுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முன் முயற்சியாக சமாதான நடைமுறையை மேம்பாடு செய்யும் நல்லெண்ண நோக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரும்; தமிழர் விடுதலை இராணுவத்தின் பிரதமதளபதியுமான வேலுப்பிள்ளை பிரபாகரன் இம்மாதம 24ம் திகதி நள்ளிரவு முதல் ஜனவரி மாதம் 24ம் திகதி நள்ளிரவு வரையிலான ஒரு மாத காலத்திற்கு ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார்.

வன்னியில் உள்ள விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகத்தில் வைத்து தனது படைவீரர்களுக்கு குறிப்பிட்ட காலப்பகுதியில் சிறிலங்கா இராணுவம் மீது தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாம் என்றும் ஆணைபிறப்பித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னித் தலைமைச் செயலகத்தினால் நேற்று யுத்த நிறுத்தம் தொடர்பான அதிகார பூர்வ அறிவிப்பு ஒன்று விடுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரும், பிரதம இராணுவத் தளபதியுமான வே. பிரபாகரன் யுத்த நிறுத்தம் தொடர்பாக தமிழர் படையணிக்கு விடுத்துள்ள உத்தரவில் சிறிலங்கா ஆயுதப் படையினருக்கு எதிராக இம் மாதம் 24 ஆம்திகதி நள்ளிரவு முதல் அடுத்தவருடம் ஜனவரி மாதம் 24 ஆம்திகதி நள்ளிரவு

10-ம் பக்கம் பார்க்க

## புலிகளின் யுத்த நிறுத்தத்திற்கு விரைவில் அரசு பதிலளிக்கும்

### அமைச்சர் பிரியதர்சன யாப்பா அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளினால்அறிவிக்கப்பட்டுள்ள ஒருதலைப்பட்சமான ஒரு மாதகால யுத்த நிறுத்தம் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விரைவில் அறிவிப்பார் என்று தொடர்புசாதன அமைச்சர் அநுரா பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளினால் அறிவிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க வெளிநாட்டில் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டிருப்பதனால் வெளிவிவகார

(02ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு சமாதான பேச்சிற்கான முதற்படி

### பீற்றர் ஹெயின் வரவேற்பு

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை நான் வரவேற்கின்றேன். இது சமாதான பேச்சுவார்த்தை நடைபதற்குரிய சூழ்நிலையை உருவாக்கும் முதற்படி.

இவ்வாறு பிரித்தானிய வெளிவிவகார துணைஅமைச்சர் பீற்றர்ஹெயின் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் நேற்று ஒரு மாதகாலத்துக்கு யுத்த நிறுத்தம் செய்வதாக வெளியிட்ட உத்தியோக பூர்வ அறிவிப்பை அடுத்தே துணைஅமைச்சர் பீற்றஹெ

10-ம் பக்கம் பார்க்க

## யுத்த நிறுத்தத்தை நீடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

### நல்ல சந்தர்ப்பமென ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் அறிவிக்கப்பட்டுள்ள யுத்த நிறுத்த அறிவிப்பை நல்லதொரு சகுனமாகக்கருதி அர்சாங்கம் அதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரம

10-ம் பக்கம் பார்க்க

## யுத்த நிறுத்த அறிவிப்பு சந்தேகம் தருகிறது!

### நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை வைத்து நாம் சந்தோசப்பட முடியாது அவர்கள் முதலில் செய்ய வேண்டியது யுத்த நிறுத்தம் அல்ல அரசின் தீர்வு யோசனைகளை ஏற்றுக் கொள்வதேயென்று நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பையடுத்தே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை

10-ம் பக்கம் பார்க்க

## வீண்விமர்சனத்தை விட்டு வாய்ப்பை பயன்படுத்துக

### அரசிடம் சங்கரி கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு மாத கால யுத்த நிறுத்த அறிவிப்பு மகிழ்ச்சிகரமான ஒரு செய்தியாகும்

நீண்டகால இடைவெளிக்

8-ம் பக்கம் பார்க்க

## யுத்த நிறுத்தஅறிவிப்பால் மக்களுக்குபயன்ஏற்படாது

### தவராஜா எம்-பி கருத்து

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின்யுத்த நிறுத்த அறிவிப்பானது உண்மையில் இதயசுத்தியான நேர்மையான நோக்குயடயது அல்லமாறாக உள்நோக்கம் கொண்டதாக இவ் யுத்த நிறுத்தம் அமைந்துள்ளது. இதனால் மக்க

10-ம் பக்கம் பார்க்க

## சமாதானத்தின் சமிக்ஞை விநாயகமூர்த்தி கருத்து!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரினால் இதயசுத்தியுடன் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு மாத கால யுத்த நிறுத்த அறிவிப்பை அரசாங்கம் ஏற்று உடனடியான யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற

10-ம் பக்கம் பார்க்க

## காணாமல்போன 8பேரின் மர்மம்நீடிக்கிறது

### ஜெகன்.எப.பிபலாலியுடன் தொடர்பு

(யாழ்ப்பாணம்)

மிருசுவில்வடக்கு படித்த மகளிர் குடியேற்ற திட்ட பகுதிக்கு கடந்தசெவ்வாய்க் கிழமை விறகுஎடுக்கச்சென்றுகாணாமல்போனஒரேகுடும்பத்தைச் சேர்ந்த எட்டுப் தொடர்பான விபரம் இது வரைவெளிவராத மர்மமாக நீடித்துள்ளது.

இச்சம்பவம்

10-ம் பக்கம் பார்க்க

## ஐ. சி. ஆர். சி. கப்பல் திரும்பியது

(கொழும்பு)

திருமலையிலிருந்து அத்தியாவசிய மருந்துப் பொருட்களுடன் பருத்தித்துறைக்கு வந்த ஐ. சி. ஆர், சி. கப்பல் பருத்தித்துறையில் கடல் கொந்தளிப்பு காரணமாக பொருட்களை இறக்காது மீண்டும் திருமலை சென்றுள்ளது. (இ)

# செய்தித் துளிகள்

## செயலமர்வு

தீவகக் கல்விவலயப் பாடசாலைகளில் 2001 ஆம் ஆண்டில் தரம் 8 , தரம் 11 இல் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கு யா/மத்தியகல்லூரியில் செயலமர்வு நடைபெறவுள்ளது.

கணிதமும் விஞ்ஞானமும் இம்மாதம் 26,27,28 ஆகிய திகதிகளிலும், சமூகக் கல்வி 26,27,28,29,30ஆகிய திகதிகளிலும், தமிழ் 23,24 ஆகிய திகதிகளிலும்,ஆங்கிலம் 27, 28 ஆகிய திகதிகளிலும் நடைபெறும்.

குறித்த தரங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது இச்செயலமர்வில் பங்குபற்றுமாறும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(உ)

## இறுதி ஆட்டம்

(கரணவாய்)

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிறன்று கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இவ் இறுதியாட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம், எதிர்த்து விளையாடிய வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழகத்தை தண்ட உதை மூலம் 3:1 என்ற கோல்க்கணக்கில் வெற்றியீட்டியது.

அதற்கு முன்பு நடைபெற்ற மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம், தொண்டமனாறு விளையாட்டுக்கழகத்தை வென்று மூன்றாம் இடத்தைத் தட்டிக்கொண்டது.

இப்போட்டியில் வெற்றி பெற்ற கழகங்களுக்கான வெற்றிக்கேடயங்களை, இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட கரவெட்டி பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர் எ.எம்.யோசப் வழங்கினார்.

(உ-27)

## பயண நடைமுறையில் மாற்றம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையிலான கடல்வழிப் போக்குவரத்தினை அதிகரிக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கடல்வழிப் போக்குவரத்து தினசரி 3 தடவைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனை 5 தடவையாக அதிகரிக்குமாறு தற்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இச்சேவையை 5 தடவைகளாக விஸ்தரிப்பதன் மூலம், அரச ஊழியர்கள், வியாபாரிகள் ஆகியோர் பெரும்நன்மையடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-75)

## மீனவ நிவாரணம்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் கொழும்புத்துறை பாசையூர் குருநகர்பகுதிகளில் வாழ்ந்த தொழில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தினால் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இவ்விடங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மீனவர்களை நாளை சனிக்கிழமை காலை 9.00மணிக்கு றக்கா வீதியிலுள்ள யாழ் பிரதேச செயலகத்தின் தையற்பயிற்சி நிலையத்துக்குச் சமுகந்தரும்படி யாழ் பிரதேச செயலர் திரு.பா.செந்தில்நந்தனன் கேட்டுள்ளார்.

(வ)

## அர்த்தம் உள்ள விவாகம்

(சங்கானை)

பிரமஸ்ரீசபா வாசுதேவ சர்மா அவர்களின் 'அர்த்தம் உள்ளவிவாகம்' எனும்நூல் சித்தன்கேணிஸ்ரீசிதம் பரரேஸ்வரர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் ஞாயிறன்று பி.ப 2.00மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத்தலைவர் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணஐயர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகள்அருளாசியுரையும்,சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் வாழ்த்துரையும் வழங்கவுள்ளனர்.

(உ-ப-28)

## இறுதிசுற்றுப் போட்டி

(திருநெல்வேலி)

பொற்பதி விளையாட்டுக் கழகம் நடத்திய 7 பேர் கொண்ட சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் வரும் ஞாயிறு 24 ஆம் திகதிஅன்று பனிக்கர் மைதானத்தில் நடை பெறவுள்ளது.

முதலாம் இரண்டாம் இடத்திற்கான ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும்மூன்றாம்இடத்திற்கான ஆட்டத்தில் சென் மேரிஸ் விளையாட்டுஅணியை எதிர்த்து யாழ். சிற்றிஸார் விளையாட்டு அணியும் விளையாடவுள்ளன.

(உ-22)

## நிவாரணம் வழங்கல்

[மானிப்பாய்]

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக்கிளைகள் மூலம் இடம் பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

[உ-120[

## 'நங்கையர்' நாதம் வெளியீடு

[ஈச்சமோட்டை]

வட்டுக்கோட்டை மகளிர் இலக்கிய வட்டத்தின் காலாண்டு சஞ்சிகையான 'நங்கையர் நாதம்' சஞ்சிகை வெளியீடு எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் வட்டுக்கோட்டை மூளாய் வீதியிலுள்ள ஐக்கிய நாணய சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி த. சுவாநந்தினி தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், சஞ்சிகையின் வெளியீட்டுரையை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மகளிர் குழுத்தலைவி திருமதி ரதிசோதிலிங்கமும்மதிப்பீட்டு உரையை மூத்த பத்திரிகையாளர் வி. சின்னத்தம்பியும் நிகழ்த்தவுள்ளனர்.

[உ-59]

## வரவேற்பு உபசார நிகழ்வு

(கந்தர்மடம்)

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை புதுமுகமாணவர்களுக்கான வரவேற்பு உபசாரநிகழ்வு இன்றுகாலை 9·00மணிக்கு இராமநாதன் நுண்கலைத்துறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில்பிரதம விருந்தினராக பேராசிரியர் அ.சண்முகதாசும் சிறப்புவிருந்தினராக கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ.பாலச்சந்திரனும் கலந்துகொள்வர்.

(ச-37)

## உப-தபாலகம் இயங்குகிறது

[கல்வயல்]

மீசாலை உபதபால் அலுவலகம் பருத்தித்துறை புற்ளையில் இயங்கி வருகின்றது.

அப்பகுதி மக்களுக்குரிய கொடுப்பனவுகள் யாவும் மேற்படி இடத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

## பொதுக் கூட்டம்

(மானிப்பாய்)

நவாலி முருகானந்தா சனசமூகநிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நிலையத் தலைவர் இ. சசிக்குமார் தலைமையில் நடைபெறும்.

(உ-120)

## கரவெட்டியில் இடம்பெயர்ந்தோர் கொடுப்பனவு

(மந்திகை)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்தோருக்கான ரூபா. 2000 வழங்கப்படுவாக பிரதேச செயலர் எஸ் ஸ்ரீ நிவாசன் தெரிவித்துள்ளார்.

மேற்படி கொடுப்பனவுகள் மருதங்கேணி, சாவகச்சேரி, பளை ஆகிய பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கே வழங்கப்படுகின்றன.

இதுவரை கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளாதோர் தத்தமது கிராமசேவையாளருடன் தொடர்புகொண்டு, உறுதிப்படுத்திய பின் நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-23)

## சமுர்த்தி செயலணி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்திசெயலணி அமைக்கும்கூட்டம் நல்லூர்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே-119கிராமசேவகர் பிரிவில நாளைக்காலை 10.00 மணிக்கு கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்திலிடம்பெறஉள்ளது நாளை மாலை 3.00 மணிக்கு கொக்குவில் சிறிஞானபண்டிதா வித்தியாசாலையில் கொக்குவில் மத்தி, மேற்கு ஜே-128,கொக்குவில் தென்மேற்கு ஜே-127ஆகியகிராம அலுவலர்பிரிவுகளை சேர்ந்த மக்களுக்கான சமுர்த்திசெயலணி அமைக்கும் கூட்டங்கள் இடம்பெறவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.(க-0337)

## விசாரணை மேற் கொள்ளப்படும்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட மட்டுவில் கமலாசினி வித்தியாலய சாதாரணதரம் மாணவன் சபாரத்தினம் இளையராஜாவினுடைய விசாரணைகளை தாம் மேற்கொள்வதாக வடமாகாண சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலிகுணசேகர மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். கிளை இணைப்பாளருக்கு தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காங்கேசன் துறை சென்ற இணைப்பாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (வ-12)

## யுத்த.;:

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்து - புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்புக் குறித்து - அரசின்நிலைப்பாட்டை அறிவிப்பார் என்று தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி வெளிநாட்டில் தங்கியிருப்பதனால் அரசின் நிலை குறித்து உடனடியாக எதுவும் கூற முடியாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

(வ)

## அயல்வீட்டுசோற்றை ருசி பார்த்த நாயினால் ஊரவரிடையே களேபரம்

(கோப்பாய்)

நள்ளிரவு வேளை அடுத்த வீட்டுச்சோற்றை சுவை பார்க்க எண்ணிய நாயினால் களேபரம் மூண்ட சம்பவம் கோப்பாய் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

பரபரப்பையும் சச்சரவையும் ஒருங்கே ஏற்படுத்திய இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது.

வளர்ப்பு நாய் ஒன்று நள்ளிரவு வேளை அயல்வீட்டில் சோற்றுப்பானைக்குள் தலையை நுழைத்து உணவு அருந்த முற்பட்ட வேளையில் தலையை வெளியே எடுக்க முடியாது போனது.

இதனால் அவஸ்தைப்பட்ட மேற்படி நாய் அங்குமிங்கும் ஓடி தலையை மோதி பானையை அகற்றுவதற்காகக் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டது.

இதனால் இரவு நேரத்தில் எழும்பிய புதிய ஒலியினால் அக்கம் பக்கத்தில் நின்றமாடுகள் மிரண்டு குரல் கொடுக்கத் தொடங்கின.

நாய்கள் இடைவிடாது குரைத்து பொதுமக்களுக்கு மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தின.

ஆயினும் நாயின் எஜமானர்கள் தகுந்த நேரத்தில் விழிப்புடன் செயற்பட்டு நாயின் அவஸ்தை நிலையை போக்கும்முகமாகபானையை வெட்டி அகற்றினர்.

இத்துடன் பிரச்சினை தீர்ந்து விடவில்லை.அடுத்த நாள் காலை தொடங்கியது சண்டைப்பிரசண்டம்.

பானை உரிமையாளர் பானையை சேதப்படுத்திய மைக்காய் சூடான வார்த்தை பிரயோகங்களைஅயல்வீட்டவர் மேல் ஏவத் தொடங்கினார்.பின்னர்பதற்றநிலை தணிந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

(உ-79)

## யாழில் 219 பேருக்கு தொலைபேசி 'வலம்புரி' அலுவலகத்தில் பார்வையிடலாம்

யாழ். குடாநாட்டில் 219 பேருக்கு முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்பிற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி கொழும்பிலுள்ள 'நான்' அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

விபரங்களை வலம்புரிக்காரியாலயத்திலும் யாழ். செயலகத்திலும் பாவையிடலாம் என மேற்படி 'நான்' வடமாகாண மீள் குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபையினர் தெரிவித்துள்ளனர்.

(கு-ச)

## கிரிக்கெட் அணிக்கு யாழிலிருந்து நால்வர்

(சுண்டிக்குளி)

வடக்குக் கிழக்கு மாகாண பாடசாலைகள் துடுப்பாட்ட அணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 4 மாணவர்கள் தெரிவாகியிருக்கின்றனர்.

யாழ். மத்தியகல்லூரிமாணவர்களான வி.ரஜீவ்குமார், எஸ்.றொசான்மற்றும் கொக்குவில்இந்துக் கல்லூரிமாணவனான எஸ்.மதுரஷன், யாழ். இந்துக்கல்லூரிமாணவனான எஸ்.விஸ்ணுகாந் ஆகியோரே திறமைஅடிப்படையில்தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

(உ-110


அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு
சிறந்த இடம்

காஞ்சனா
நகை மாளிகை

244, பிரதான வீதி, பருத்தித்துறை.
(கி/1191)



தரணி எங்கும் பவனி வரும்
'வலம்புரி'யின் பணி மென்மேலும்
தொடர வாழ்த்துபவர்கள்

அம்பிகை
நகை அகம்



பிரதான வீதி,
பருத்தித்துறை.
உரிமையாளர் எஸ். ஏ. மதிவதனன்
(கி/1193)

மிலேனியத்தில் ஓர் அகவை காணும் வலம்புரியே
உன்னை பல நூறு அகவைகள் காண
வாழ்த்துகிறோம்

**செல்வா போட்டோ அன்ட் வீடியோ**

தனிப்பட்ட, குரூப் போட்டோக்கள் மற்றும் திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்ததின கொண்டாட்டங்கள் அனைத்துக்கும் போட்டோக்கள், வீடியோ படங்கள் எடுக்க சிறந்த ஒரே ஸ்தாபனம்.

**செல்வா போட்டோ அன்ட் வீடியோ**

பூதர்மடம் பருத்தித்துறை வீதி
கோப்பாய்
(2111)

இரண்டாவது அகவையில் காலடிபதிக்கும் 'வலம்புரி' யின் சேவைகள் உலகு எங்கனும் வியாபிக்க
இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

புதிய பெயருடன் புதுப்பொலிவுடன்!

**கஸியோ சயன்ஸ் சென்ரர்**

**CASIO SCIENCE CENTRE**

2001 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன
★ பாலர் பாடசாலை முதல் க. பொ த (சா/த) வரையான வகுப்புக்கள்
★ க. பொ. த (உ/த) விஞ்ஞான வகுப்புக்கள்
★ Spoken English
என்பன நடைபெறுகின்றன.

-நிர்வாகி

பருத்தித்துறை வீதி,
3 ஆம கட்டை
கல்வியங்காடு.
(2117)

"நித்தம் நித்தம் நின் வருகை எம் சித்தத்தை
கவர்ந்து என்றும் புத்தம் புதிய செய்திகளைத்
தர வாழ்த்துகின்றோம்"

**இரும்புப் பொருட்கள்**

★ **வாகன உதிரிப்பாகங்கள்**

என்பவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்

**தரன் காட்வெயர்**

**130, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்**

(இ-1278)

# நாடகப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலா மன்றத்தின் இளவாலைக் கிளையும், இளவாலை பங்குத் திருச்சபையும் இணைந்து கடந்த 17 ஆம் திகதி இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தில் நடத்திய இளவாலைமறைக் கோட்டபங்குகளிற்கு இடையிலான நாடகப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

.......... மறைக் கோட்டம் முதலாம் இடத்தையும், சுன்னாகம் மறைக் கோட்டம் இரண்டாம் இடத்தையும், இளவாலை மறைக் கோட்டம் மூன்றாம் இடத்தையும், பெற்று முறையே மூவாயிரம், இரண்டாயிரம், ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசில்களை தட்டிக்கொண்டுள்ளன.

இம் மூன்று நாடகங்களும் வரும் 30 ஆம் திகதி இளவாலைப் பங்கில் நடைபெறவுள்ள ஒளிவிழாவில் மேடையேற்றப்படவுள்ளன.

(உ-12)

# டெங்கு காய்ச்சல், ஒழிப்பு நடவடிக்கையில் நவாலி இளைஞர் யுவதிகள்

[மானிப்பாய்]

டெங்கு காய்ச்சல் ஒழிப்பின் முதல் நடவடிக்கையாக நவாலியில் பாரிய சிரமதான நிகழ்வொன்றுகடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

நவாலி ஊன்றுகோல் அறப் பணியகமும், முருகானந்தா சனசமூக நிலையமும் ஒன்றிணைந்து மேற்கொண்ட இந் நிகழ்வில் பெருமளவிலான இளைஞர்களும், யுவதிகளும் கலந்து கொண்டனர்.

இவர்களால் இப்பகுதியிலுள்ளவீதியோரங்கள், பாடசாலைவளவுகள், ஆலயங்கள் பொதுஸ்தாபனங்கள் என்பவற்றின் வளவுகளிலுள்ள புல் பூண்டுகள் பற்றைவெட்டி அகற்றப்பட்டன.

இதே வேளை மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட ஏனைய வீதியோரங்கள், பிரதான வாய்க்கால்கள், பற்றைக் காடாக இருப்பதனால் நுளம்புப் பெருக்கத்துக்கு இவை ஏதுவாக அமைகின்றதெனவும் பிரதேச சபை இது விடயத்தில் கவனம்செலுத்த வேண்டும் என்றும் மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-120)

# பங்கீட்டு அட்டை மீளாய்வு

(கல்வியங்காடு)

நல்லூர் பிரதேச பிரிவிற்குட்பட்ட குடும்பங்களின் பங்கீட்டு அட்டை மீளாய்வு செய்வதற்கான படிவங்கள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதனைப் பெற்று, விரைவில் படிவத்தினைப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

(உ-54)

## மின் விநியோகம் இல்லை

[கோப்பாய்]

நீர்வேலி தொடக்கம் புத்தூர்வரையான பகுதிகளுக்கு இதுவரை மின் விநியோகம் மேற்கொள்ளப்படாமையை இட்டு அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மின் விநியோகம் மேற்கொள்வதற்கான மின் கம்பங்கள் இப்பகுதியில் ஏற்கனவே நாட்டப்பட்ட போதிலும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை.

(உ-79)

தடை பல தாண்டி ஓராண்டினை நிறைவு செய்யும் வலம்புரியின் பணியை வாழ்த்துகின்றோம்.

இணையற்ற சேவையில் 29வது ஆண்டில்

**தரம் 3 முதல் A/L வரை தனித்துவமான கல்வி நிறுவனம்**

ESTD:-1973 REGD:- No 3/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY.

(2137)

'வலம்புரி' க்கு
எமது இனிய நல்வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்

**திஷானி தொலைத் தொடர்பு நிலையம்**

தொலைபேசி:
உள்நாடு:- 070-212631
வெளிநாடு:- 0094-70-212631

பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(2107)

முதலாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் 'வலம்புரி' பத்திரிகையை வாழ்த்துகிறோம்

★ சொக்கட்டான் மணப்பந்தல்
★ ஒலி, ஒளி அமைப்பு
★ பிளாஸ்ரிக் கதிரை வகைகள்
என்பவற்றை வாடகைக்கு பெற்றுக்கொள்ளவும்
★ சிறந்த கமராக்கள் மூலம் கொம்பியூட்டர் மிக்சிங் செய்து பெற்றிட சிறந்த இடம்.

**இராஜேஸ்ரோன் வீடியோ**

மந்துவில்,
கொடிகாமம.

தொடர்புகளுக்கு:
★ இராஜ வீதி
நவக்கிரி,
புத்தூர்.
★ தாமோதரா
வைத்திய நிலையம்
பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.
★ பவானி ஜுவெலர்ஸ்
ம. ம.வி. வீதி,
நெல்லியடி.

(123)

## உலர் உணவு விநியோகம்

(துன்னாலை)

சாவகச்சேரியிலிருந்துஇடம் பெயர்ந்தவர்களுக்குரிய டிசம்பர் மாத உலர் உணவு நிவாரணம் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருவதாக சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

[செ-41]

## குடியேற அனுமதி

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு J/ 258 கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்கள் மீண்டும் அப்பகுதிகளில் குடியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்ற உறுப்பினரான கே. வி. குகேந்திரன் பலாலி இராணுவத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு உரையாடியதை அடுத்தே எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து மேற்படி பகுதியில் மக்கள் மீளவும் குடியேற இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

(ச)

## கந்தபுராண வசன காவியம் வெளியீடு

(சங்கானை)

அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் எழுதிய 'கந்தபுராணவசன காவியம்' நூல் எதிர் வரும் 23 ஆம் திகதி விக்கிழமை பி.ப 2.00 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் மு. பத்மநாதன் தலைமையில் நடைபெற உள்ளது.

நிகழ்வில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிவான் மு. திருநாவுக்கரசு யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை தலைவர் நாச்சியார் செல்வநாயகம் மற்றும் வலிமேற்கு பிரதேச செயலர் நா. வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-18)

## பதவி உயர்வு பெறும் வங்கி முகாமையாளர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி யாழ்ப்பாண பிரதேச முகாமையாளர் க. பாலசுப்பிரமணியம் பதவி உயர்வு பெற்று கொழும்புக்கு செல்வதையிட்டு நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் பிரியாவிடை வைபவம் ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது

இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட அனைத்து ஊழியர்களும் ஒன்றிணைந்து இப்பிரியாவிடை வைபவத்தினை ஏற்பாடு செய்துள்ளனர்.

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண பிரதேச முகாமையாளராக கடமையாற்றிய பாலசுப்பிரமணியம், தற்போது இலங்கை வங்கியில் வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளராக பதவி உயர்வு பெற்று கொழும்புக்குச் செல்வது குறிப்பிடத்தக்கது.

(உ)

## கரோல் நிகழ்வு

(திருநெல்வேலி)

திருநெல்வேலி பாற்பண்ணைப்பகுதியில் கம்பன்கழக ஏற்பாட்டில் நத்தார் பண்டிகையையொட்டி, கடந்த சில நாட்காளாகதொடர்ச்சியாககரோல்நிகழ்வு நடைபெற்று வருகிறது. (உ-22)

## தேங்காய் விலை அதிகரிப்பு

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் தேங்காயின் விலை அதிகரித்துக் காணப்படுகிறது.

(உ-27)

## சமுர்த்தி அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரிதேச செயலர் பிரிவில் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு சமுர்த்தி அலுவலகம் ஆடியபாதம் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வலய முகாமையாளர் இ. ஜெயதாஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா, சமுர்த்தி உதவிஆணையாளர் எஸ். சிவபாதசுந்தரம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-வ-3)

## இராசி பலன்

22-12-2000

(மார்கழி 7, வெள்ளி)
துவாதசி மு.இ 8.03 வரை
விசாகம் பி.இ 12.20 வரை
ராகுகாலம் 10.55- 12.25
சுபநேரம் 6.25- 7.55
சித்தம்.

**மேடம்**
போசன சுகம், தனலாபம். பிரயாணம், நிலைமாற்றம்.

**இடபம்**
சந்தோசமான நிலை, முயற்சி விருத்தி, பகைவர் விலகுவர், சிறு வியாதி.

**மிதுனம்**
வியாதி, மனப்பதட்டம், வீண் கலகம், காரியதாமதம்.

**கடகம்**
தன்னம்பிக்கைக் குறைவு, தாய் வழி உறவு, விரோதம், காரிய வெற்றி.

**சிங்கம்**
காரியம் கைகூடும், உறவினர் உதவி, தனவரவு, சந்தோசமான நிகழ்வு.

**கன்னி**
வாக்குக் கலகம், காரிய தாமதம், ரோகம், பணச் செலவு.

**துலாம்**
நல்ல உணவு கிடைத்தல், சயன சுகம், நிலைக் கேடு, காரிய நன்மை.

**விருச்சிகம்**
பிரயாணம், காரியக்கேடு, தன விரயம், பிணி.

**தனுசு**
தனவரவு, குடும்பசுகம், புகழ், சூடு சம்பந்தமான நோய்.

**மகரம்**
அபகீர்த்தி, தொழில் அதிகாரம், காரிய தாமதம், பெரியோர் உதவி.

**கும்பம்**
பிரயாணம், மனப்பயம், முயற்சி தாமதம், எதிர்பாராத நன்மை.

**மீனம்**
வீண் பகை, காரிய தடங்கல், பிரயாணபயம், துயரம்.

[பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.]

வளவன்

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம்மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 165928 ஏ | 165928 பி |
| 169036 ஏ | 170190 ஏ |
| 170190 பி | 172828 ஏ |
| 172828 பி | 172873 ஏ |
| 172984 ஏ | 172984 பி |
| 172984 சி | 172984 டி |
| 172984 ஈ | 172985 ஏ |
| 174813 ஏ | 174922 ஏ |
| 175067 ஏ | 175095 ஏ |
| 175095 பி | 175095 சி |
| 175204 ஏ | 175204 பி |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 166977 ஏ | 166977 பி |
| 166977 சி | 166977 டி |

### கோப்பாய்

| | |
|---|---|
| 162695 ஏ | 162695 பி |
| 166944 ஏ | 166944 பி |
| 166944 சி | 166944 டி |
| 166944 ஈ | 166985 ஏ |
| 166985 பி | 167036 ஏ |
| 167036 பி | 167107 ஏ |
| 167107 பி | 170447 ஏ |
| 170447 பி | 170447 சி |
| 170447 டி | 170448 ஏ |
| 170448 பி | 170448 சி |
| 170490 ஏ | 170490 பி |
| 170491 ஏ | 170491 பி |
| 170491 சி | 170491 டி |
| 170491 ஈ | 170498 ஏ |
| 170498 பி | 170499 ஏ |
| 170540 ஏ | 170540 பி |
| 170601 ஏ | 154401 ஏ |
| 154401 பி | 154438 ஏ |
| 154438 பி | 154446 ஏ |
| 154446 பி | 159519 ஏ |
| 166402 ஏ | 166402 பி |
| 168227 ஏ | 168230 ஏ |
| 168230 பி | 168265 ஏ |
| 168288 ஏ | 168288 பி |
| 168288 சி | 168294 ஏ |
| 168294 பி | 168296 ஏ |
| 168296 பி | 168317 ஏ |
| 168317 பி | 168337 ஏ |
| 168337 பி | 168344 ஏ |
| 168344 பி | 168354 ஏ |
| 168354 பி | 168354 சி |
| 168367 ஏ | 168397 ஏ |
| 168397 பி | 168424 ஏ |
| 168488 ஏ | 173216 ஏ |
| 173216 பி | 173244 ஏ |
| 173244 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 166761 ஏ | 166761 பி |
| 166761 சி | 166792 ஏ |
| 174743 ஏ | 174905 ஏ |
| 174905 பி | 174905 சி |
| 174926 ஏ | 175053 ஏ |
| 175062 ஏ | 175062 பி |
| 175730 ஏ | 175924 ஏ |
| 175925 ஏ | 175926 ஏ |
| 175926 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 138370 ஏ | 138370 பி |
| 155130 ஏ | 155130 பி |
| 164293 ஏ | 164293 பி |
| 164293 சி | 164293 டி |
| 164293 ஈ | 164294 ஏ |
| 172780 ஏ | 172818 ஏ |
| 172825 ஏ | 172886 ஏ |
| 173010 ஏ | 173010 பி |
| 173010 சி | 173010 டி |
| 173010 ஈ | 173010 எவ் |
| 173010 ஜி | 173021 ஏ |
| 174114 ஏ | 174114 பி |
| 174892 ஏ | 174965 ஏ |
| 174965 பி | 174965 சி |
| 174978 ஏ | 174978 பி |
| 174982 | 174982 சி |
| 175052 ஏ | 175081 ஏ |
| 175149 ஏ | 175812 ஏ |
| 175954 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 161661 ஏ | 170199 ஏ |
| 170199 பி | 175829 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 164006 ஏ | 164006 பி |
| 164006 சி | 164006 டி |
| 172729 ஏ | 172827 ஏ |
| 172827 பி | 174821 ஏ |
| 174821 பி | 174952 ஏ |
| 174952 பி | 174967 ஏ |
| 174967 பி | 174967 சி |
| 174967 டி | 174967 ஈ |
| 175082 ஏ | 175082 பி |
| 175973 ஏ | 175974 ஏ |

(ச)

## கண்டெடுப்பு

[யாழ்ப்பாணம்]

திறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதி தண்ணீர் தாங்கி அருகில் உள்ள பொலிஸ் காவலரன் பகுதியில் நேற்று [21-12-2000] கண்டெடுக்கப்பட்ட திறப்பு கோர்வையே அங்கிருந்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. [க-12]


## சுப்றா கல்வி நிலையம்

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான
பிரிவுகள்-2003

ஆரம்பம்: 05-01-2001 வெள்ளி காலை 7.30

அனுமதிகளை முன்னரே பெற்றுக் கொள்ளுங்கள்.

நிர்வாகம். சித்தன்கேணி.
(கி-1279)



## கிறிஸ்மஸ், புதுவருட பண்டிகையை முன்னிட்டு

இறக்குமதி செய்யப்பட்ட:

- ★ சாறி வகைகள்
- ★ ரவுசர் துணிவகைகள் 250/- முதல்550/-வரை
- ★ BOX சேட் வகைகள்
- ★ ஸ்கேட் அன் பிளவ்ஸ்
- ★ பஞ்சாபி வகைகள்
- ★ மிலேனியம் கவுண் புடவைகள்
- ★ திருமணப் பட்டுப் புடவைகள்

அனைத்து அழகிய ஐவுளிகளின் ஆலயம்

# சிவகணேசன் ஸ்ரோர்ஸ்

41, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு சனி, ஞாயிறுகளிலும் விற்பனை உண்டு)

(கி-1123)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை உப அதிபர்
செல்வி தா. மேரியோகராணியின்
அன்பு மாமனார்

**வேதமுத்து அற்புதம்**

மரணமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்
யா/ உரும்பிராய், றோ. க. த. க பாடசாலை

குறிப்பு: நேற்று வெளியான இவ்விளம்பரத்தில் ய./உடுப்பிட்டி றோ. க. த. க.பா. என்பதை யா/உரும்பிராய் றோ. க. த. பா.என திருத்தி வாசிக்கவும்.

(ஆ-ர்)(2032)

## பிரிவுத்துயர் பகிர்வு

**கதிரவேலு பரமசாமி**

கதிரவேலு பரமசாமி 20ஆம் திகதி காலமானார். அன்னாரின் பூதவுடல் நேற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:- திருமதி. கு. சண்முகடாஸ் (சகோதரி)

**கனகர் சின்னத்தம்பி**

கைதடி மத்தியைப் பிறப்பிடமாகவும், தற்போது உடுவிலில் வசித்தவருமாகிய கனகர் சின்னத்தம்பி 20 ஆம் திகதி காலமானர்.

இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்:- சி. சிவகுரு (மகன்)

**நாகமணி சிங்கராசா**

குரும்பசிட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகமணி சிங்கராசா 15- 12- 2000 அன்று கொழும்பில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்:- பசுவதிப்பிள்ளை கார்த்திகேசு.

# மாயையில் ஒடுங்கும் ஆன்மாக்கள்

# மல நீக்கம் பெற்று உய்யும் மார்கழி நோன்பு

விண்ணவர்களாகிய தேவர்களுக்கு ஒருநாள் மண்ணுலக மக்களாகிய எமக்கு ஒருவருட காலமாகும். தைமுதல் ஆனிவரையான உத்தராயன காலம் தேவர் கட்குப் பகல் பொழுதாகவும்; ஆடிமுதல் மார்கழி வரையான தெட்சணாயன காலம் தேவர்கட்கு இராப் பொழுதாகவும், இதில் மார்கழி மாதம் விடியற்காலமாகவும் விளங்குகின்றது.

விடியற் பொழுதை மண்ணுலகத்தினர் சிறப்பாககருதுவார்கள். ''வைகறை எழுவோன் வையகத்து உயர்வான்'' எனவும் ''வைகறைத்துயிலெழு'' எனவும் வைகறைப் பொழுதினைச் சிறப்பாகக் கொண்டு கல்வி கற்றல், வழிபாடுகள் செய்தல், தொழில்கள் ஆரம்பித்தல், போன்ற கருமங்களைச் செய்கின்றார்கள்.

### விண்ணவரை மகிழ்வித்தல்

மேலும் கீதோபதேசத்திலும் கண்ணபிரான் அருச்சுனனிடம் ''மாதங்களில் நான் மார்கழி'' என பெருமையுடன் கூறுகின்றார். இந்த மார்கழி மாதத்திலே தான் நவக்கிரகமுதல் நாயகனாகிய சூரியபகவானும், தேவகுருவாகிய வியாழபகவானுடைய ஆட்சி வீட்டிற்கு தனுராசிக்குப் பிரவேசிக்கின்றார். சிறப்புமிக்கதான இம் மார்கழி மாதத்திலே திருவெம்பாவை, திருப்பாவை, திருப்பள்ளி எழுச்சி என்பனவற்றை விடியற்காலை ஓதி வழிபாடுகள் செய்வதன் மூலம் மண்ணுலகோர், விண்ணுலகோரை மகிழ்வித்து வையகத்தில் வளமுடன் வாழ இறைவன் அருள் பாலிக்கின்றார்.

### பெருப்பேறு

மார்கழி மாதத்தில் சுவர்க்கவாயில் ஏகாதசி நன்நாள்திரு மகாவிஷ்ணுவையும் திருவாதிரை நாளும் எம்பிரான் சிவபெருமானையும் வேண்டுதல்செய்வதற்கு மிகச்சிறந்த நாட்களாக கருதப்படுகின்றது.

## நீர்வை மணி

ஸ்ரீரங்கத்தில் சுவர்க்கவாயில் தரிசனமும் திருவாதிரையும் சிதம்பரத்தில் தில்லைநடராசப் பெருமானின் ஆர்த்திரா தரிசனமும் எமது சமய வழிபாட்டில் கிடைத்தற்கரிய பெரும் பேறாகப் போற்றப்படுகின்றது.

### பஜனையின் சிறப்பு

மார்கழி மாதம் பிறந்ததுமே வீடுகளில் பசுஞ்சாணத்தினால பிள்ளையார் பிடித்தும், அழகிய மாக்கோலங்கள் இட்டும் வழிபாடுகள் செய்வதும், திருவெமபாவை, திருப்பாவை, திருப்பள்ளி எழுச்சி பாடி ஆலயங்கள் தோறும் வீதிகள் தோறும் பஜனைகள செய்வதும் சிறியோர் முதல் பெரியோர் வரை இதில் உற்சாகமாகப் பங்கு கொண்டு வழிபாடுகள் செய்வதும் மார்கழி மாதத்திற்கே உரியதனிச் சிறப்பன்றோ.

### மார்கழி மகத்துவம்

போற்றியாம் மார்கழிநீராடல் ஓர் எம் பாவாய் என மாணிக் கவாசக சுவாமிகளும் திருப்பாவையில் 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்நாள்' என சூடிக் கொடுத்த நாச்சியாரும் இம்மாதத்தினைச் சிறப்பித்துக் கூறுவதிலிருந்து மார்கழி மாதத்தின் தனிச்சிறப்பு விளங்குகின்றதன்றோ.

வடமொழியில் மார்கசீர்ஷம் என வழங்கப்படும் இம் மார்கழித்திங்கள், பௌர்ணமித்திதியும், மிருகசீரிட நட்சத்திரமும் கூடும் மாதமாகும். மா-என்பது மாய்தல், மறைதல் ஒடுங்குதல் எனவும் சழி என்பது கழிதல், நீங்குதல் எனவும்-இறைவன்உயிர்களை மாயையில் ஒடுங்கச் செய்து-பின் அதனின்னும் நீங்கிமீளத் தோற்றுவிக்கும் காலமாகவும் கொள்ளப்படுகிறது.

### ஆன்ம ஈடேற்றம்

இம்மாதத்தில்வரும்ஆதிரை நாள் என்பது ஆ-ஆன்மாக்கள், திரை-மறைதல் எனவே உலகான்மாக்கள் இவ்வுலக வாழ்வுத் திரையில் மறைந்து அழுந்திப்பின் ஆர்த்திரா தரிசனத்தின் மூலமும், மார்கழி வைகறைப்பொழுதின் வழிபாட்டின்மூலமும்ஆன் ஈடேற்றம் பெறுவதுமாகும்எனசைவ சமயச் சான்றோர் அறிவுறுத்தியுள்ளனர்.

எனவே நாமும் மார்கழித் திங்களில் வைகறையிற் துயில் நீக்கி இறைவழிபாடுகளையும் நற்கருமங்களையும் செய்து வாழ்வில் ஈடேற்றமடைவோமாக,

---

### யாழ்.மாவட்டத்தில்

# அருகி வரும் ஆத்மீக நாட்டம் சமய ஆர்வலர்கள் பெரும்கவலை

(தென்மராட்சி)

யாழ்.மாவட்டத்தில்இளைஞர்-யுவதிகள் மத்தியில் ஆத்மீகக் கலாசாரம் மற்றும் பண்பாடுகள் பெரிய அளவில் அருகிவருவது குறித்து வயது முதிர்ந்த இந்து சமயவாதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாகஅவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இந்து. சமயக் கலாசாரம் பண்பாடு ஓங்கி வளர்ந்த யாழ்ப்பாணத்து மண்ணில், ஆத்மீக நாட்டம் கொண்ட இளம் தலை முறையினர் மிகவும் அரிதாகவே உள்ளனர்.

அதே போன்று பக்திநிலையும் மாறிவருகின்றது. இந்து ஆலயங்களில் பக்திபூர்வமான வழிபாடுகள் என்பன மாறிவருகின்றன. ஆலயங்களில் சமய ஒலிநாடாக்களையும், நாதஸ்வர ஓசையையும், மேளவாத்திய நிகழ்ச்சிகளையும் நடத்தி விட்டால் பக்தி ஏற்பட்டு வருகின்றது. என்றதப்பான எண்ணம் நிலவிவருவதாகவும் கூறப்படுகிறது

சமயத்தின் பேரால் இன்று யாழ்ப்பாணத்து மண்ணில் நிலவிவருகின்ற அநீதிகளையும்,பாரபட்சங்களையும், அறியாமைகளையும் நீக்கி பண்பட்ட சமயக்கொள்கைகள்,கருத்துக்களை முதன்மைப்படுத்த இந்துசமய அமைப்புகள்முன்வரல் வேண்டும் என சமய அபிமானிகள் பெரிதும் விரும்புகின்றனர்.

வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்களிடம் இருந்துலட்சம் லட்சமாக நிதியைப் பெற்று ஆலய கோபுரங்களையும், தேர்களையும், கட்டடங்களையும் விஸ்தரிப்பதில் ஆலய நிர்வாகங்கள் அக்கறை கொள்கின்றனவே யொழிய சமயத்தை, பக்தியை, சமய வாழ்வு முறையைப் பேணிக் காப்பாற்றுவதில் யாருமே விசுவாசமாக நாட்டம்காட்டவில்லை என்பதுதான் பேருண்மை என சமய ஆர்வலங்கள் பலரும் வேதனையுடன் தெரிவித்துள்ளனர்.

## பரீட்சை ஒத்திவைப்பு

(சுண்டுக்குளி)

அகில இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவிருந்தபரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மேற்படி சங்க யாழ்ப்பாணப் பகுதி தலைவர் கப்டன் குணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. [க-110]

## ஜயந்திவிழா

[யாழ்ப்பாணம்]

மோட்ச நிலை அடைவதே மனிதப் பிறவி எடுத்த தன் பெறுபேறு என்பதை குறிகோளாகக் கொண்ட இந்தியாவிலே, கைலாசத்தின் சிகரத்தில் ஊற்று எடுத்து வேதகானத்தோடு இணைந்து வரும் கங்கை கரையில் தவத்தில் அமர்ந்து, மனிதப் பிறவி எடுத்தவர்களின் தனிப்பண்பாகிய பிரித்தறிவைப் பாவிப்பதற்கு உதவியாக சேவை செய், அன்புகாட்டு, கொடுத்துப் பழகு, புனிதமடை, தியானம் செய், அனுபூதியடை எனும் ஆறுமாத்திரைகளை கொடுத்த இம்யஜோதியாம் சுவாமி சிவானந்தரின் பாதகமலங்களில் அர்ப்பணித்தவரின் ஒருவரான யோகிராஜ்சுவாமி சச்சிதானந்தரின் 86வதுஜயந்திதினம் உலக பூரண யோக சமாஜங்களும், திவ்ய ஜீவன சங்கங்களும் கொண்டாடப்படுகிறது.

யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் சிவானந்த சிறுவர் சமய பாடசாலையின் 28 வது ஆண்டு விழாவும் இடம்பெற உள்ளது. இன்று காலை 9 மணிக்கு யாழ். திவ்யஜீவன சங்கத் தலைவர் கனகரட்ணம் தலைமையில் கலை நிகழ்ச்சிகளும் மகேஸ்வரபூசையும் இடம் பெறும். (க)

## ஆயுர்வேத ஆஸ்பத்திரி

(கரணவாய்)

கரணவாய்ப்பகுதிமக்களின் நலன் கருதி, அப்பகுதியில் ஆயுர்வேத வைத்திய நிலையம் அமைப்பதற்கான கட்டிட வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 36இலட்சரூபாநிதியுதவியினைக் கொண்டு இக்கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. (உ-27)

## வணிகர் கழகம் அனுமதி

(அரியாலை)

நத்தார்,புதுவருடப் பண்டிகைகளை முன்னிட்டு எதிர் வரும் 31 ஆம் திகதி வரை சனி,ஞாயிறு தினங்களிலும் அரச வர்த்தகவிடுமுறை தினங்களிலும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதியிலிருந்து மேற்படி அனுமதியை யாழ்.வணிகர் கழகம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது, (ச-106)

நூலக சேவையில் பதவி உயர்வு பெறும்

## பத்திரிகையாளர்

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபை பிரதம நூலகர் ஏ. என். எஸ். திருச்செல்வம் பொது நிர்வாக அமைச்சினால் புதிதாக உருவாக்கப் பட்டஸ்ரீலங்கா நூலகசேவை (எஸ் எல்.எல்.எஸ். தரம் i) பதவிக்கு வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வட- இலங்கைப் பண்பாட்டுக் கழகச் செயலாளராகவும் பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசத்தினதும் பருத்தித்துறை பிரதேச சமூக பொருளாளராகஅபிவிருத்தி மன்றத்தினதும் பதில் தலைவராகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பருத்தித்துறை பிரிவின் போஷகராகவும் பருத்தித்துறை பிரதேச முன் பள்ளி ஆசிரியர் சங்க போஷகராகவும் புலோலி வடகிழக்கு மாதர் கிராமஅபிவிருத்திச் சங்கத்தினதும் ஆலோசகராகவும் வடமராட்சி கல்வி அபிவிருத்திக் கழகத்தின் பொருளாளராகவும் சேவையாற்றி வருகின்றார்.

யாழ். உள்ளூராட்சித் திணைக்களம் யாழ் பல்கலைக் கழக நூலகத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்டத்தில் நடத்திய சிறந்தநூலகர் தெரிவின் போது பாராட்டிற்குரிய நூலகராகத் தெரிவு செய்யப்பட்டு பரிசில்களை தட்டிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-52)

### காலிக் கடற்பரப்பில்

# மூழ்கிய கப்பல்கள் மீட்க பெரு முயற்சி

(கொழும்பு)

கடந்த காலங்களில் காலி கடற்பரப்பில் மூழ்கிய 17 கப்பல்களை, வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் மீட்டு வெளியே கொண்டு வர அமைச்சரவை மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேவேளை, இருபது மில்லியன் ரூபா செலவில் காலி துறைமுகம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாகவும் அதன் ஒரு கட்டமாகவே மூழ்கிய கப்பல்களை மீட்கும் பணி மேற் காள்ளப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது. (உ-5)

### கட்டடத் திணைக்கள

# தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

(துன்னாலை)

கட்டடத்திணைக்களத்தில் தற்காலிக ஊழியர்களாக பணிபுரிந்த 14 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்தஆண்டு வெளியான' தற்காலிக ஊழியரை நிரந்தரமாக்குதல் தொடர்பான அரச வர்த்தமானியின் அறிக்கையின் பிரகாரம் இந் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எ. வந்தியதேவன் பருத்தித்துறை ரி.கோகுலன் உரும்பிராய், ரி. சுகதாஸன் யாழ்ப்பாணம், பி. பாலராஜ் கரவெட்டி, எ. ரமணிதரன் கோண்டாவில். கே. பிரதீபன் யாழ்ப்பாணம், ப. சத்தியசீலன் வட்டுக்கோட்டை, எம். விஜயேந்திரன் வட்டுக்கோட்டை,வி. செந்தில்ராஜ் வட்டுக்கோட்டை கே ரமேஸ் யாழ்ப்பாணம், எஸ். சிவப்பிரியா கொக்குவில், பி ஜீவானந்தன் மானிப்பாய், வி. கணேசன் சங்கானை, கே. குலேந்திரன் புத்தூர் ஆகியோரே நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர். (உ-41)

## விசேட பொதுக்கூட்டம்

(அரியாலை)

கூட்டுறவுஊழியர் தொழிற் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10. 00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் தலைவர் பெ. கனகரத்தினம் தலைமையில் நடைபெறும். (ச-106)

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர்கள்குறிப்பிடப் பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றது

வேலன் தவராசா, ஜோசப் ஒழுங்கை கோப்பாய்வடக்கு.

முருகேசு சின்னத்துரை சின்னத்துரை செல்லம்மா கைதடி தெற்கு,

தர்மராசா குமாரசாமி, வீரபத்திரர்வீதி. நுணாவில்,

மாணிக்கம் செல்வராசா, மட்டுவில் தெற்கு சாவகச்சேரி [உ]

## நாடக ஆற்றுகை

(நல்லூர்)

வரும் சனி ஞாயிறு தினங்களில் யாழ் கைலாசபதி கலையரங்கில் பொங்கொலி நகர் நாடக ஆற்றுகை இடம் பெறவுள்ளது.

யாழ்.பல்கலை விரிவுரையாளர் ரதிதரனின் நெறியாள்கையில் உருவான இந் நாடகம்,இருநாட்களும் இரு தடவைகள மேடையேற்றப் படவுள்ளது. (உ-11-14)

## அனுமதி மறுப்பு

[துன்னாலை]

சாவகச்சேரி நகர் செல்வதற்கு வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி இம் மாதம் 25 ஆம் திகதிவரை மறுக்கப்பட்டிருப்பதாக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் தெரிவித்துள்ளார். [உ-41]

# பொது அறிவு வினாக்கள்

## இல. 36 தொகுப்பு : யூட்

பின்வரும் நாடுகளின் தலைநகரங்கள் எவை?

1) எல்சல்வடோர்
2) கயானா
3) கொலம்பியா
4) கொஸ்டரிக்கா
5) சுவீடன்

பின்வரும் நாடுகளின் நாணய அலகுகள் எவை?

6) சுவிற்சர்லாந்து
7) போர்த்துக்கல்
8) ஜேர்மனி
9) மலேசியா
10) துருக்கி
11) ஜப்பான் நாட்டின் தேசிய விளையாட்டுக்கள் எவை?
12) உலகின் செங்கட்டி வீடு எனச்சிறப்பாக அழைக்கப்படும் நாடு எது?
13) இதயத்தின் இயக்கத்தை துல்லியமாக காட்டும் கருவியினது பெயர் என்ன?
14) ஐ.நா. சபையினால் சர்வதேச விண்வெளி ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
15) விண்வெளியில் பயணம் செய்த முதல் பெண்மணியினது பெயர் என்ன?
16) உலகின் முதலாவது எய்ட்ஸ் நோயாளி எந்த நாட்டில் கண்டறியப்பட்டார்?
17) X-கதிர் யாரல் கண்டுபிடிக்கப்பட்டது?
18) உலகின் சினிமா நூற்றாண்டு விழா எத்தனையாம் ஆண்டு கொண்டாடப்பட்டது?
19) நோர்வே நாட்டு பாராளுமன்றம் எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது?
20) உயிருடன் வாழும் புனிதை எனப் போற்றப்படும் புகழ் பெற்ற பெண்மணி யார்?
21) உலகப் புகழ் பெற்ற கின்னஸ் புத்தகத்தை உருவாக்கியவர் யார்?
22) இஸ்லாமிய மதத்தின் பிறப்பிடம் என அழைக்கப்படும் நாடு எது?
23) இலங்கையின் புகழ் பெற்ற பெண் பத்திரிகையாளர் யார்?
24) இலங்கையின் முதலாவது சோதனைக் குழாய்க் குழந்தை எத்தனையாம் ஆண்டு பிறந்தது?
25) 20 ம் நூற்றாண்டின் சிறந்த மனிதராக Times சஞ்சிகையால் தெரிவு செய்யப்பட்டவர் யார்?
26) பிலிப்பைன்ஸ் நாட்டின் உயர் விருதான ''ரமன்மக்சேஸ'' விருது யார் ஞாபகார்த்தமாக வழங்கப்படுகிறது?
27) இத்தாலி நாட்டின் அலுவலக அறிக்கை எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது?
28) உலகின் முதலாவது பெண் தாதியின் பெயர் என்ன?
29) I.N A. எந்த நாட்டினது செய்தி நிறுவனம்?
30) கனடா நாட்டின் தேசியச் சின்னம் எது?
31) உலகின் மிக உயரத்தில் உள்ள தலைநகரம் எது?
32) உலகின் மிகப் பெரிய பூங்கா எது? அது எங்குள்ளது?

பின்வரும் சர்வதேச நிறுவனங்களின் தமிழ் விரிவாக்கம் யாது?

33) NATO
34) U.N.O
35) O.P.E.C
36) P.L.O
37) W.I.P.O
38) உலக மது விலக்குதினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள தினம் எது?
39) வணிக மொழி எனச்சிறப்பாக அழைக்கப்படும் மொழி எது?
40) பச்சை விளக்கு சர்வதேசங்களில் எதனைக் குறிக்கப் பயன் படுகிறது?

**குறிப்பு:-**

இதற்கான விடைகள் 28-12-2000 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

## அறிவியல் பகுதி
## வினா இல: 36

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்; ..............................

சொந்த முகவரி;: ..............................

கற்கும் பாடசாலை : ..............................

மாணவர் கையொப்பம் ; ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்

# பொது அறிவு வினா இல-35 விடைகள்

1) கன்பெரா
2) ஜகார்த்தா
3) தெஹ்ரான்
4) பீகிங்
5) மணிலா
6) சுலாட்டி
7) லெவ்
8) வெலன்
9) குராணா
10) திரேச்சமா
11) இங்கிலாந்தில்
12) மும்தாஜ் மஹால்
13) றகர்
14) யூன் -26
15) தமிழ்
16) தொற்றுநோய்
17) 53
18) 1957ல் வில்லம்கோல்ட்
19) தாய்லாந்து
20) சீனா (46 இலட்சம்)
21) பெல்ஜியம்
22) அல்டி மானி
23) கிப்போ கிரட்டீஸ்
24) காளிதாசன்
25) சியூரல்
26) சூமேக்கர் லெவி
27) அப்துல்லா ஒகலன்
28) அமெரிக்கா
29) ஸ்ரீபன் ஸ்பில் பேர்க்
30) வெள்ரசு மரம்
31) பிக்மீஸ்கள்
32) போல்டர் அணை (கொலறாடோ நதியிலுள்ளது ஐக்கிய அமெரிக்காவில்
33) 1914 ம் ஆண்டு
34) 1948 ல்
35) கன்னியா
36) Z-ஜோன்சன்
37) சிம்பனி
38) ஜோஸப் புலிட்ஸர்
39) பில் கேற்ஸ்
40) மஞ்சள் புத்தகம்

# பொது அறிவு வினா இல-35

### அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

★ க. ஜீவகன், தென்மராட்சி
★ செ. ஜெரீம்நிரோசன், வட்டுக்கோட்டை
★ த. கயல்விழி, காரைநகர்
★ அ. கிருஷாந்தி, நெல்லியடி
★ ச. ஹபிலன், வட்டுக்கோட்டை
★ ஜெ. சங்கீதா, கோண்டாவில்
★ சி. சயுந்தன், வட்டுக்கோட்டை
★ உ. அனித்தா, உரும்பிராய்
★ சி. காயத்திரி, நல்லூர்
★ கோ. கஜேந்திரன், யாழ்ப்பாணம்
★ த. விதுஷகன், நல்லூர்
★ து. உமா, சண்டிலிப்பாய்
★ அ. ஜெனோயன், ஆனைக்கோட்டை
★ ச. நிதர்ஷினி, சித்தங்கேணி

## திருத்தப்படாத வீதி

(கல்வியங்காடு)

முத்திரைச்சந்திக்கு உட்புறமாக செல்லும் குமார வீதி, நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாமல் இருக்கிறது. (உ-54)

## கரவெட்டியில் ஊனமுற்றோர் தினவிழா

(மந்திகை)

கரவெட்டி பிரதேச செயலகத்தின் ஊனமுற்றோர் தினம் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 10.00மணிக்கு பிரதேசசெயலகமா நாட்டுமண்டபத்தில்நடைபெறவுள்ளது;

பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சமூகசேவை உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொள்ள இருப்பதுடன் ஊனமுற்றோர் கௌரவிக்கப்பட்டு அவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ச-23)

## விண் கூவியவாறு,
# இரவில் பறக்கும் பட்டம் மக்களிடையே பதட்டம்

[மந்துவில்]

இரவுநேரத்தில் விண்கூவும் பட்டங்களால் மக்களிடையே பெரும் பயமும் பதட்டமும் நிலவுவதாக தெரியவந்துள்ளது.

பட்டம் பறக்கவிடும் கால [illegible] கயால் தற்போது எந்நேரமும் வானில் பட்டங்களை காண முடிகிறது.

இவற்றை இரவிலும் பறக்க விடுவதால் நள்ளிரவுவேளைகளில் திடீரெனக் கண்விழிக்கும் மக்கள் பட்டங்களின் விண் ஓசையை கேட்டு விமானங்களின் இரைச்சல் எனப் பயங்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது

[உ -39]

## வளமுடன் வலம் வருக

வலம்புரி வலம் வந்து வருடம் ஒன்றாகும்
வசந்தமான நன்நாளில் - என்றும்
வலம்புரி வளமுடன் வலம் வர
வலம்புரி நாயகனை - வணங்கி
வாழ்த்துக்கள் கூறுகின்றேன்.

சுஜாதா

வலம்புரி முதலாண்டு நிறைவுகண்டு
அகில இலங்கைத் திருமுறை மன்றம் வழங்கும்

## வாழ்த்து

நலன்புரியும் தமிழின்பம்
நாடும்சைவ நெறிவிளக்கம்
நலம்விரும்பும் சமகாலச்
சமாச்சாரம் எனப்பலவும்
நிலம்புகழும் யாழ்ப்பாண
நிகர்வறுசெந் தமிழினிலே

வலம்புரிசெய் பெருஞ்சேவை

## நேரங்கள் சரி வந்தால்...

சீ என்று கழித்தற்கு நினையாதே
சீரெங்கள் மனிதர்க்குப் பிழையாகும்
நோய் வென்று உனைப் பற்றும் விரைவாக
நீதங்கள் கெடுதற்குத் துணையாமே
நீ அன்பின் வழியில் ஒன்றிடின், மாறாய்
பேதங்கள் உனை விட்டுச் செலல் கூடும்
நேர் வந்து விடுபட்ட செயலாலே
பூவிந்த உயிர்
நிற்றல் வருமாமோ?
மார் தட்டி சில புல்லர் மடிவார்கள்
வேர் கொண்டும் கயமைக்குள் நுழைவார்கள்
சீர் என்ற நிலைமைக்கு நெறி தேடார்
போர் சென்று கலைதற்கு வழி யாது?
பார் வென்று
உன் புகழ் எங்கும் பரவாது
கூர் கொண்ட வசை வந்து
அடைவானேன்?
போர் நின்று நிலை கொண்டு விடுமாமோ?
நேரங்கள் சரி வந்து அடையாமல்
பாழ் கொன்று புதுமைக்குள் புகுமாமோ?
வாழும் நல் நிலைமைக்கு விடுவாயோ?
சேரின்ப வழி மட்டு எனலாமோ?

நீர்வேலியூர் பவித்திரன்

## மண்ணில் வந்துதித்த கலைக் குயிலே-வாழி

தலைப் பிள்ளையொன்று தாய் வயிற்றில்
உருவெடுத்து
முலைக் காம்பை உமிழும் மழலையாய்ப்
பிறக்கையிலே
தாய் பெற்ற இன்பத்துக் கீடுண்டோ
தமிழ் மண்ணில்
பாய்கின்ற அன்பு வெள்ளத்தால் அலை
மோதும் உள்ளம்
மண்ணில் பிறக்கின்ற குழந்தையால்
மனதில் இன்பம்
பெண்ணன்றி ஆணாய்ப் பிறக்குமேல்
பேரின்பம்
கண் போல மண்ணில் வந்துதித்த
கலைக் குயிலே
ஆண்டொன்று கண்டாய் ஆண்மகனே
நீ வளர்வாய்

நல்லறிவு ஞானம் இன்னும்
நயத்தோடு இலக்கியம்
இல்லை யென்றெண்ணாது
உலகத்துச் சேதிகள்
வல்ல விளையாட்டு வகை
வகையாய்க் கொண்டு வந்த
வல்லோனே வலம்புரிக் குழந்தாய்
வாழி வாழி.
விநாயகன் கையில் வித்தகமாய்
தங்கும் வலம்புரியே
விநாயகன் தான் மண்ணில் நீ
விரைந்தின்னும் வளர்ந்திடுவாய்
போட்டிக் கஞ்சாத பொக்கிசமே
தமிழர் புத்திரனே
வீட்டுக்கு வந்த வித்தகனே
வாழ்க வாழ்க

தி. வேல்நம்பி

## இன்று ஒரு தகவல்

# தலைசிறந்த விஞ்ஞானி

சர்வாதிகாரி ஹிட்லரினால் யூதர்கள்கொடுமைப்படுத்தப் பட்ட ஜேர்மனி தேசத்திலே ஒரு யூத குடும்பம் இருந்தது. அவர்களுக்கு ஒரு மகன் இருந் தான். படிப்பிலே மந்தம். சரியாகப் பேசவராது. கோழை. எதிலும் ஒரு பயந்தசுபாவம். எதிலும் நாணம் பையன்களுடன் சேர்ந்துவிளையாடமாட்டான், கோழிக்குஞ்சுகள்தான் அவனுடைய நண்பர்கள். இப்படியாகவாழ்ந்த அவனை உலகுக்கு உதவாத பிறப்பு என்று ஆசிரியர்கள் சொன்னார்கள், பெற்றோரும்அவன் படித்து முன்னேற மாட்டான் என்றே நினைத்தனர்.

அவன் பிற்காலத்திலும்பல தடவைகளில் அசட்டுத்தனமாகவே நடந்திருக்கிறான். ஒரு நாள் டிறாம் வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்த போது கொண்டக்டரிடம் பணம் கொடுத்து டிக்கற் பெற்றான். கொண்டக்டர் பாக்கியைக் கொடுத்த போது சரியான பாக்கி தரவில்லையென்று அவன் நினைத்தான், கொண்டக்டர் தான் கொடுத்த பாக்கியை எண்ணிக் காட்டித் தனது கணக்குச் சரியென்று நிரூபித்தான். ''உனக்கு இந்தச் சின்னக் கணக்குக்கூடத்தெரியவில்லை என்று கோபித்தான். அவனால் என்ன பதில் சொல்ல முடியும்.?

இன்னொரு நாள், அவன் கணப்புச் சட்டிக்குமுன்னால் இருந்தான். குளிர் தேசத்தில் குளிரைப் போக்குவதற்கு கணப்புச் சட்டி உபயோகிப்பார்கள். அன்று அச்சட்டியில் சூடு அதிகமாக இருந்தது. அவனால் தாங்க முடியவில்லை. அவன் கூச்சலிட்டு வேலைக்காரியை அழைத்து ''இந்தக் கணப்புச் சட்டியில் சூடு அதிகம் இதைத் தூக்கிக் கொஞ்சம் எட்டவை'' என்றான். வேலைக்காரி பணிவுடன் ''இது தானா? சட்டி சூடு என்றால் நீங்கள் எழுந்து எட்ட உட்காருவது தானே'' என்று கேட்டாள். அப்பொழுது தான், தானேஎட்ட உட்காரலாம் என்று அவனுக்குத் தோன்றியது. இப்படிஒரு மக்குமனிதனைப் பற்றிஎன்ன நினைக்கிறீர்கள்.?

இந்த நூற்றாண்டில் விஞ்ஞானத்தில் அதிகம் புதுமை நிகழ்ந்திருக்கிறது. இந்தப் புதுமைகளை சாத்தியமாக்கியது ஐன்ஸ்டீன் என்ற பேரறிஞர் சொன்னதத்துவம். அவர் சொன்ன ரிலேட்டிவிட்டி என்ற கால, இடம், பொதுத் தொடர்புத்தத்துவம்அறிவின் மகத்தானசாதனைஇந்தத்தத்துவ விளக்கம் புதியபோக்கினை ஏற்படுத்தி, செயற்கரிய சாதனைகளை விஞ்ஞானிகள் சாதிக்கக் கூடியதாயிலிருந்தது. இந் நூற்றாண்டில் பிறந்த மிகச் சிறந்தஅறிஞர் ஐன்ஸ்டீன் என்பதில் துளியும் ஐயமில்லை. இந்த மனிதர் எத்தனை சந்தர்ப்பங்களில் ஒரு புதிராகவும் அசட்டு மனிதராகவும் விளங்கினார்.?

நன்றி

இளமைப்பருவத்திலே

# இத்தாலி நாட்டில் 73பேருக்குஅகதி அந்தஸ்து

[கொழும்பு]

இத்தாலியில் கைதுசெய்யப் பட்ட124பேரில் 73பேருக்கு அகதிஅந்தஸ்து வழங்க அந் நாட்டுஅரசு தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது. மீதி51பேர்மீதான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அகதிஅந்தஸ்து வழங்கப்பட்ட 73 பேரில் 26 தமிழர்கள் அடங்குவர் என்பதும் குறிப்பிடத்தக்கது .(வ)

# சஞ்சீவனின் மரண அறிக்கை இன்னமும் வழங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தலையாழிப் பகுதியில் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சோமசுந்தரம் சஞ்சீவனின் மரணச் சான்றிதழும் மரணவிசாரணை அறிக்கையும்இதுவரைவழங்கப்படவில்லையென புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த ஜூலைமாதம் 13ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட சஞ்சீவனின் மரணம் தொடர்பான மரணவிசாரணை அறிக்கையும் மரணச் சான்றிதழும் கிடைக்கப் பெறாமை குறித்து யாழ் மாவட்ட எம். பியும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவருமான அ விநாயகமூர்த்தியிடம் சஞ்சீவனின் தந்தையார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விநாயகமூர்த்தி உரியவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார். (வ)

# ஆலயங்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு!

## அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

ஆலயங்களின் புனரமைப்புக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் வலி தெற்கு பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட ஆலயங்களுக்கு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு, தமிழர் விவகார இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மயிலணி முருகமூர்த்தி ஆலயத்துக்கு இரண்டு லட்சம் ரூபாவும், சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயம், மயிலணி அம்மன் கோவில், ஏழாலை ஞானவைரர் கோவில், ஏழாலை, பெரிய தம்பிரான்கோவில், சுன்னாகம் ஐயனார் கோவில் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் கோவில், சங்குவேலி வெட்டுக்கட்டை சித்திவிநாயகர் கோவில், தாவடி ஸ்ரீகாமாட்சி அம்பாள் கோவில், ஆகியவற்றுக்கு தலா ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளைகுடா நாட்டில் யுத்த நடவடிக்கையால் பாதிப்படைந்துள்ள ஏனைய ஆலயங்களுக்கும் கட்டம் கட்டமாக புனரமைப்பு நிதி வழங்கப்படுமென்று பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட் ஈ. பி. டி. பி அமைப்பாளருமான கே.வி. குகேந்திரன் தெரிவித்துள்ளார். (இ)

## பனை, தென்னை வள

# அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்

## பா உறுப்பினர் ஜெகனிடம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் காப்புறுதி செய்யப்பட வேண்டும். 1995 ஆம் அண்டிற்குப்பின் சரியான உறுப்புரிமை கூட வழங்கப்படவில்லை. அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் உடனடியாக களைந்து எறியப்பட வேண்டும்.

பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்க வலிகாமப் பகுதி உறுப்பினர்கள் கொத்தணித் தலைவர் நா. கணேசன் உட்பட 7 பேர் கொண்ட தூதுக்குழுவினர் அண்மையில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. குகேந்திரனைச் சந்தித்து தமது குறைபாடுகள் தொடர்பாக கையளிக்கப்பட்ட மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

மேற்படிஅங்கத்துவ சங்கங்களுக்குமதுபான விற்பனை நிலைய அனுமதி பெற்றுத் தரப்பட வேண்டும்.

யாழ் குடாநாட்டில் 18 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கியும், சாராயம் விற்பனை செய்வதற்கான மதுபான நிலைய அனுமதிப்பத்திரம் ஒரு சங்கத்திற்கும் வழங்கப்படவில்லை.

அனுமதிப்பத்திரம் வழங்கப்படின் இச்சங்கங்கள் மூலம் எமது உள்ளூர் உற்பத்தி செய்யும் சாராயத்தைக் கூடுதலான அளவில் விற்பனை செய்ய முடியும்.

ஏழைச் சீவல் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யும் கள் முழுவதையும் எமது வடிசாலை கொள்வனவு செய்யக் கூடிய நிலை ஏற்பட்டு பொருளாதார உயர்ச்சியை அடைய முடியும்.

எனவே அங்கத்துவச் சங்கங்களுக்கு அனுமதிப்பத்திரம், பெற்றுத் தந்து உதவ வேண்டும்.

நிவாரண வெட்டு தொடர்பாகவும், பனங்கட்டித் தொழிற்சாலை, பனஞ்சீனி உற்பத்திநிலையம் ஆரம்பிப்பதுபற்றியும், தென்னிலங்கையிலிருந்து இறக்குமதிசெய்யும் சாராய இறக்குமதி குறைக்கப்படல் அல்லது வடபகுதி பனஞ்சாராயம் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும் பனை உற்பத்தி சாராயத்திற்கான வரி குறைப்பது குறித்தும் அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவற்றினை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு, வடக்கு - கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான கே. என். டக்ளஸ் தேவானந்த வுடன் பேசி சரியான தீர்வு ஒன்றினை பெற்று தருகிறதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

மேலும் சீனி, பனங்கட்டி உற்பத்திக்கு நிலையங்கள் இருப்பின் அவற்றின் விபரங்களை அறியத் தருமாறும் அதற்குரிய உடன் நடவடிக்கை எடுத்தால் 2001 ஆம் ஆண்டில் இந்து இயங்க வைக்க முடியும் என்றும் குழுவினரைக் கேட்டுக் கொண்டார்.

# நிதியுதவி செய்யுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யுத்த அனர்த்தங்களினால் சேதமுற்றிருந்த யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் புனரமைப்பில் குறையான வேலைகளை செய்து முடிப்பதற்கு யாழ்.மாவட்ட எம்பிக்களுக்குஒதுக்கப் பட்டு வரும் பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவு திட்டத்தையடுத்து உதவி செய்யுமாறு யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபை கடிதம் ஒன்றை எம்பிக்களுக்கு அனுப்பிவைத்துள்ளது. (வ)

# வெங்காயம் இறக்குமதி

கொழும்பு)

எதிர்வரும் நத்தார் பண்டிகையைமுன்னிட்டு இந்தியாவில் இருந்து கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியன இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இவையாவும் அவ்வப்பகுதியில் உள்ள கூட்டுறவுமொத்த விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது சுமார் 200மெற்றிக்தொன் கிழங்கும் 200மெற்றிக்தொன் பெரிய வெங்காயமும் இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (வ)

# வலி. மேற்கில் இரண்டு லட்சம் பனைகள்

(சங்கானை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் சமுர்த்தி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு நடவடிக்கை மூலம் அங்குள்ள இராணுவ பாதுகாப்பு எல்லைகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் 2 இலட்சத்து 35 ஆயிரத்து 6பனைகள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இங்குள்ள அரச மற்றும் தனியார் காணிகளில் 37 ஆயிரத்து 600 பனம் விதைகள், பனை அபிவிருத்தி சபையினரால் நாட்டப்பட்டு அவை தொடர்ந்தும் பனம் பண்ணைகளாக அபிவிருத்தி சபையினரால் பராமரிக்கப் பட்டு வருகிறது. (உ-24)

# வடிகால்கள் துப்புரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதி முக்கிய வடிகால்கள் விரைவில் துப்புரவு செய்யப்படவுள்ளதாகவும் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முதற்கட்டமாக ஆஸ்பத்திரி வீதியிலிருந்து வின்சர் தியேட்டர் வரையான வடிகால்கள் திருத்தி அமைக்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் வடிகால்களை மூடி வர்த்தக நிலையங்களுடன் இணைக்கப்பட்ட படிகள் விரைவில்அகற்றப்பட வேண்டும் என்றும் மேலும்அறிவுறுத்தல்விடுக்கப் படவுள்ளதாகவும் சம்பந்தப் பட்ட வணிகர் கழகங்களூடாக இவ் அறிவித்தல் விடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

# இராணுவ அதிகாரி சுட்டுக் கொலை

(வவுனியா)

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் பிஸ்ரல் குழுவினரால் இராணுவபுலனாய்வுப்பிரிவு அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மன்னார் நகரில் நேற்றுக்காலை இடம்பெற்ற இத்துப்பாக்கிசூட்டுச் சம்பவத்தின்போது இராணுவவீரர் ஒருவரும் காயமடைந்துள்ளார், (வ)

# அதிரடிப் படையினரால் கொக்கட்டிச்சோலையில் சுற்றிவளைத்து தேடுதல்

(வவுனியா)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் பகுதியைச் சேர்ந்த கிராமங்கள் அண்மையில் அதிரடிப் படையினரால் சுற்றிவளைப்புக்குள்ளாக்கப்பட்டது

இச்சுற்றிவளைப்பின் போது, 13 தொடக்கம் 50 வரையான வயதுடைய இருபாலரும் விசேட அதிரடிப் படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஒவ்வொருவருக்கும் அப்பியாசக்கொப்பிகள் வழங்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமைகளில் முகாமுக்குச் சென்று கையெழுத்திட வேண்டும் எனவும் பணித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. (உ-5)

# களைகொல்லி பெறுவதில் நெல்லியடியில் சிரமம்

## இருவரின் மரணம் காரணமாம்

(துன்னாலை)

நெல்லியடிப் பகுதி களைகொல்லிவிற்பனைநிலையங்களில், கிருமிநாசினிகளைப் பெற்றுக்கொள்வதில் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாக கூறப்படுகிறது.

அண்மைக்காலத்தில், அடுத்தடுத்து இருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டதையடுத்து நெல்லியடிப்பகுதி களைகொல்லி விற்பனையாளர்கள், தகுந்தஉறுதிப்படுத்தலின் பின், அவற்றை விற்பனை செய்யும் நடைமுறையை கைக்கொள்வதை அடுத்தே இச் சிரமநிலை தோற்றம் பெற்றுள்ளது.

இதனால், உண்மையில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள்கூட, பெரும் இடைஞ்சல்களின் மத்தியில் களைகொல்லி மருந்துகளை பெற்றுச்செல்வதுடன், சில வேளைகளில் பெற்றுக் கொள்ளமுடியாமல் திரும்பிச் செல்வதாகவும் தெரியவந்துள்ளது. (உ-41)

ஓராண்டு குழந்தை 'வலம்புரி'யே
பல்லாண்டு பணி செய்து வாழி!

உங்கள் இல்லங்களில் நடைபெறும் சகல மங்களகரமான
நிகழ்வுகளையும் அதி நவீன கொம்பியூட்டர் மிக்சிங்
மூலம் படப்பிடிப்பை மேற்கொள்ளவும்
புகைப்படம் எடுப்பதற்கும், மணப்பந்தல் சேவைக்கும்
நீங்கள் நாட வேண்டிய தனித்துவமான இடம்

# விஜி வீடியோ விஷன்

கலட்டி வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

பிரதான வீதி,
பருத்தித்துறை.

(கி-1294)

"தமிழ் நெஞ்சங்களின் இதயத் துடிப்பாய்த்
திகழும் வலம்புரியை வாழ்த்துகின்றோம்"

# குருபரன் கல்வி நிறுவனம்

★ தரம் 3 தொடக்கம் O/L வரையான வகுப்புகள்
★ A/L கலை, வர்த்தக வகுப்புகள்
★ SPOKEN ENGLISH வகுப்புகள்
எமது அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் கற்பிக்கப்படுகின்றது.
★ ஞாயிறு தோறும் புலமைப் பரிசில் வகுப்புகளுக்கு பரீட்சை நடைபெறுகின்றது.

★ இந்து நாகரிகம் — திரு. ஸ்ரீஸ்
★ கணக்கீடு — திரு. கணேஸ்
★ அளவையியல் — திரு. மோகன்
★ தமிழ் — செல்வி ரமணி
★ பொருளியல் — திரு. ஜெயக்குமார்
★ புவியியல் — திரு. ஸ்ரீஸ், திரு. கிரி
★ வணிகக் கல்வி — திரு. கிருபா
★ ஆங்கிலம் — திரு. மனோகரன்
★ பொது விவேகம் — திரு. அ. குமாரவேல்

நிர்வாகி

[2118]

சங்கநாத ஓசையிலே தமிழ் நெஞ்
சங்களை கொள்ளை கொண்ட
'வலம்புரி'யே, வாழி! வாழி!

கடந்த பத்து ஆண்டிற்கு மேலாக
யாழ். நகரில் முன்னணி வகிக்கும்
வைத்திய நிறுவனம்

# Modern Hospital

தலைமையகம்:
ஆறுகால் மடம்,
மானிப்பாய் வீதி,
T. P. NO. 3175

கிளை:
பலாலி வீதி,
ஊரும்பிராய் சந்தி

(2125)

'வலம்புரி'க்கு,
எமது வாழ்த்துக்கள்

ஆங்கில மருந்து வகைகள்
சிறியோர் பெரியோர்களுக்கான
பால்மா வகைகள் என்பவற்றை
நியாய விலையில் பெற்றிட

# சஞ்ஜீவி மருந்தகம்

ஸ்ரேசன் வீதி, (கி/1199) சுன்னாகம்.

'வலம்புரியின் பணி
மென் மேலும் வளர
வாழ்த்துக்கள்

அச்சக வேலைகள் மற்றும் 2001 ஆம்
ஆண்டிற்கான வர்ணக் கலண்டர்களை
பெற்றுக் கொள்ள

# சரவணா அச்சகம்

ஆஸ்பத்திரி வீதி,
(சந்திரச் சந்தி அருகாமை)
யாழ்ப்பாணம்-
(கி/1295)

'வலம்புரியின்' பணி சிறக்க
வாழ்த்துகிறோம்.

கச்சான், பருப்பு, கடலை, மிக்சர், புள்டோ, சுவிங்கம், பெப்பரமன்ட், குளுக்கோறோசா, கச்சான் அல்வா, மில்க் ரொபி, மிளகாய்த்தூள், கோப்பித்தூள் மற்றும் மஞ்சள்தூள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

# சுரேஸ் இன்டஸ்றீஸ்

கே. கே. எஸ். வீதி,
5-ம்கட்டை, சுன்னாகம்.

# ஷண் ஹொட்டல்

இல. 78, கே. கே எஸ் வீதி,
சுன்னாகம். (கி/1292)

'வலம்புரி'க்கு
எமது நல்வாழ்த்துக்கள்

★ பழைய புதிய திரைப்படங்களை தரமான முறையில் CDயில் இருந்து பதிவு செய்துகொள்ள
★ போட்டோ கொப்பி செய்துகொள்ள
★ அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பவற்றை கவரிட்டு (லெமினேற்றிங்) கொள்ள சிறந்த இடம்

# ஜெஸ்மின்
# வீடியோ கொம்ளெக்ஸ்

இல: 30, கே.கே. எஸ். வீதி சுன்னாகம்.

கொலை மேற்கொண்டாரிற் கொடிதே அலை மேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து -குறள்

# வலம்புரி

## எட்டுப் பேரும் எங்கே?

மிருசுவில் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற எட்டுப்பேரைக் காணவில்லையென்ற செய்தி தற்போது பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. வடமராட்சியிலிருந்து தமது வீடுகளைப் பார்க்கச்சென்ற எட்டுப் பேரை படையினர் தடுத்து வைத்துத் தாக்கியதாக சம்பவம் நடந்த இடத்திலிருந்துதாக்குதலுக்கு ஆளாகித் தப்பி வந்த ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் தப்பி வந்தவர் தாக்குதலினால் காயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவர் தெரிவித்த தகவலின்படி படையினர் தடுத்து வைத்திருந்த எட்டுப் பேரும் ஏதோவொரு பயங்கர ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை மட்டும் புரிந்துகொள்ள முடிகிறது.

யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றிய பின்பு 96 ஆம் ஆண்டு மீண்டும் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் - யாழ்ப்பாணத்திற்கு வந்தவர்களில் எத்தனையோபேர்காணாமல்போனதும், செம்மணியில் அவர்களின் உடல்கள் புதைக்கப்பட்டதும் மக்களின் அடிமனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. இவையெல்லாம் இம்மண்ணில் நடந்து இன்று கணவரை - பிள்ளைகளை- பெற்றோரை இழந்து துன்பத்தை மட்டும் தம் நெஞ்சங்களில் சுமந்து கொண்டு காணாமல் போனவர்கள் மீண்டும் வரமாட்டார்களா என்ற ஏக்கத்துடன் வாழும் குடும்பங்கள் பல. இந்நிலை ஏற்படுவதற்கெல்லாம் அன்று படைப்பிரிவுகளின் பொறுப்பதிகாரிகளாக இருந்தவர்களே காரணம் என்பதை மறுக்க முடியாது.

ஏனெனில் காணாமல் போய்விட்டமை குறித்து படை அதிகாரிகளுக்கு முறையீடு செய்தபோதும் அவர்கள் பொறுப்புடன்- விரைந்து விசாரணை மேற்கொண்டிருந்தால் எத்தனையோ அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களைப் பாதுகாத்திருக்க முடியும். அன்று அவர்களின் அசமந்தமே செம்மணிப் புதைகுழியின் தோற்றத்திற்கு வகை செய்தது.

அதே போன்று மிருசுவிலில் படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள எட்டுப் பேர் விடயத்திலும் அசமந்தமாக இராது உடன் விசாரணை செய்வதன் மூலம் மனிதப் புதைகுழிகளின் பெருக்கத்தை இனிமேலாவது கட்டுப்படுத்தலாம்.

# ஓராண்டு நிறைவில் ஓங்கி ஒலித்த குரல்கள்

(யாழ்ப்பாணம்)

ஒரு பத்திரிகை சிறப்பாக இயங்க வேண்டுமானால்அப்பத்திரிகை பிரதேச மக்கள் வாங்கி வாசிக்ககூடிய நுகர்வு சக்தியை கொண்டிருக்க வேண்டும்.

வலம்புரிப் பத்திரிகையின் ஆரம்ப விழாவில் 1ஆது பிரதியை பெற்று ஆரம்பித்து வைக்குமாறு நிர்வாகிகள் கேட்டதையடுத்து அதனை நான் ஆரம்பித்து வைத்த பொழுது என்னுள் எழுந்த ஐயங்களை நம்பிக்கையீனங்களை முறியடித்து இன்று தனது ஓராவது ஆண்டு நிறைவை கொண்டாடுவதை இட்டு நான் பெருமகிழ்வடைகிறேன்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வலம்புரியின் 1வது ஆண்டு நிறைவு விழாவில் தெரிவித்துள்ளார்.

வலம்புரிப் 'பத்திரிகையின் நிர்வாகஇயக்குநர் சி.வெற்றிவேலாயுதம் தலைமையில் நல்லூரில் உள்ளதுர்க்காமணி மண்டபத்தில் முதலாவது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. செய்தியாசிரியர் மு. வாமதேவனின் வரவேற்புரையைத் தொடர்ந்து துணைவேந்தர் மேலும் பேசுகையில,

யாழ், குடாநாட்டை பொறுத்த வரையில் தற்பொழுது 5லட்சம் பேர் குடியிருக்கிறார்கள். இந்நிலையில் ஐந்து நபருக்கு ஒருபத்திரிகை என்ற ரீதியில் ஒருலட்சம் பத்திரிகைகள் குடாநாட்டில் விற்பனையாக வேண்டும்.

யாழ் குடாநாட்டில் கல்வியில் ஈடுபட்டிருப்பவர்கள் குறைந்த வேதனத்திலே தமது வேலைகளை செய்து வருகிறார்கள். இதற்கு படித்தவர்கள் விரும்பி நிற்கிறார்கள் ஒரு பாலர் பாடசாலை ஆசிரியருக்கு மாத வேதனம் ஆயிரம் ரூபா மட்டுமேயாம். குடாநாட்டை பொறுத்த மட்டில் கல்வியில் ஈடுபடும் எழுத்து துறையில் ஈடுபாடு உள்ளவர்களும் குறைந்த வேதனத்திலேயே வேலை செய்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

### தகவல் தொழில்நுட்பம்

தகவல் தொழில்நுட்ப மையம் ஒன்று யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும் யுத்த அனர்த்தம் தொடர்ந்தாலும் அல்லது சமாதானம் ஏற்படுத்தப்பட்டாலும் இக் கைங்கரியம் நிறைவேற்றப்பட வேண்டும் அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் இவ்விடயித்தில் முனைப்புடம் ஈடுபட வேண்டும்.

அறிவியல் தொழில்நுட்பம் வெகுவோகமாக வளர்ந்து வரும் இந்நிலையில் உலகின் நாலா திசைகளிலிருந்தும் பத்திரிகைகள் வெளிவந்து மக்களின் அறிவுப் பசிக்கு தீனிபோடுகின்றன.

ஐதாரபாத், சென்னை, இலண்டன், திருச்சி போன்ற இடங்களில் பத்திரிகைகள் பெருமளவில் வெளியிடப்படுகின்றன. கொழும்பிலும் தேசிய தினசரிகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அவ்வகையில் யாழ்ப்பாணத்திலும் வாரமாத பத்திரிகைகள் வெளிவர வேண்டும்.

அதுமட்டுமன்றி தினசரி மாலைப்பதிப்பு வெளிவர வேண்டியதும் அவசியமாகும்.

பல்வேறு காலகட்டங்களை கடந்த மனிதன் இன்று அறிவியல் தொழில்நுட்ப உலகிற்குள் பிரவேசித்து விட்டார் அதற்கேற்ப பத்திரிகைகள் வெளியிடப்படவேண்டும்.

### யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவிக்கையில்;

உலக தொழில் நுட்பமானது மிகவேகமாக ளர்ந்துவ கொண்டிருக்கிறது நவீன வசதிகளுடன் கூடிய ஒரு சிறிய அறையிலிருந்து திமிகக் குறைந்தமனித சக்யை பயன்படுத்தி மிக இலகுவாக பத்திரிகைகளை நடத்த முடியும்.

### துர்அதிஷ்டம்

ஆனால் யாழ்ப்பாணத்தில் துர்அதிஷ்டவசமாக அத்தகைய நிலை இல்லை.

ஒருநாட்டின் கற்றோர் தொகையை மதிப்பிடும் போது பத்திரிகை படிப்போர் எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாண மக்களை பொறுத்ததரையில் பத்திரிகைஎன்பது அவர்கள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து விட்ட ஒன்றாகும்.

தினசரி காலை சாப்பாடு உட்கொள்வதுபோல பத்திரிகை மடிக்கும் வழக்கம் ஊறி விட்டது. எனவே தரமான செய்திகளை பத்திரிகாதர்மத்திற்கு இயைபாக செய்திகளை வெளியிடுவது பத்திரிகைகளின் பொறுப்பாகும்.

### சுடச்சுடச்செய்திகள்

வலம்புரியைப் பொறுத்த வரையில் அசாதாரண சூழ்நிலைகள் மத்தியிலும்தகுநத நேரத்தில் சுடச்சுடச் செய்திகளைக் கெடுத்து மக்களது ஆவலைத்தீர்த்திருக்கின்றது.

குறிப்பாக, ஆசிரியர் தலைப்பு,இன்று ஒரு தகவல் என்பன எலலோரதுசிந்தனையையும் தூண்டுவனவாக உள்ளன.

அத்துடன் மாணவர்களது சகல விதமான பரீட்சைகளுக்கும் முன்னோடியான பலஆக்கங்களைத் தாங்கி தனக்கென ஒரு இடத்தை வலம்புரி பிடித்துக்கொண்டது.

தொடர்ந்தும் வலம்புரி தமிழ் மக்களது அபிலாசைகளைப் பூர்த்தி செய்கின்ற நாளிதழாக வெளி வரவேண்டும்,எத்துனை இடுக்கண் சுழினும் துணிந்து செயற்பட வேண்டும். அதற்கு இறையாசி என்றும் துணை நிற்கும் என்று ஆசிமொழி பகர்ந்தார்

### இணுவில் காயத்திரி பீடக் குரு சிவ ஸ்ரீமகா தேவக்குருக்கள் தனது நல்லாசியுரையின் போது;

'வலம்புரி கடந்தஒரு வருடகாலமாக பத்திரிகா தர்மத்திலிருந்து சிறிதும் பிறழாமல் வெகு சிறபபாக அப்பத்திரிகா தர்மத்தைக் கடைப்பிடித்து எல்லா விதமானசெய் திகளையும் விரிவாக, உண்மையாக, பக்கம் சாராது பிரசுரித்து வந்துள்ளது யாவருக்கும் வெளிப்படையானதே'' வளர்ச்சியடைந்து வர உரியஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்க வேண்டியது நம் எல்லோருடைய பொறுப்பாகும். அதற்கு உரமூட்டி வளர்க்க வேண்டிய பொறுப்பு வலம்புரிக்கு குடும்பத்தைச் சார்ந்தது என்று கூறினார்.

**20-12-200 அன்று துர்க்கா மணிமண்டபத்தில் நிகழ்ந்த 'வலம்புரி' பத்திரிகையின் முதலாவது நிறைவுவிழாவின் தொகுப்பு பிரசுரிக்கப்படுகிறது.**

இதற்கமைய 'வலம்புரி' நடுநிலை தவறாது வெளிவருவது போற்றத்தக்கது என்றார்.

### நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்யசுவாமிகள்தனது ஆசியுரையில்;

சோதனைகள் எதுவரினும் அவற்றை எதிர் கொண்டு அதன் மூலம் மக்களுக்குச் சேவை புரிய வேண்டும் என்பதே பத்திரிகைத் தாமம். அவ்வாறே வலம்புரியும் பலசோதனைகளுக்கு மத்தியில் தனது ஓராண்டைப் பூர்த்தி செய்து கொள்கிறது.

மேலும் அவர் தனது உரையில்

### 'பாதுகாவலன்'' ஆசிரியர் வண பிதா ரூபன் மரியாம பிள்ளை தனது ஆசியுரையின் போது;

இறைவனது அருளும் ஆசியும் நிறைவாகக் கிடைத்தமையால் தான் பல மேடுபள்ளங்களைத் தாண்டி வலம்புரி இவ்வளவு தூரம் சிறப்பாக வளர்ந்து வந்துள்ளது.

இனி வரும் காலங்களில் இன்னும் சிறப்பானமுறையில் தனது பணியை யாழ்ப்பாண மக்களது இன்ப துன்ப நிகழ்வுகளுடன் இணைந்து நின்று வெளிக்கொணர வேண்டும் என்பது எங்கள் விருப்பம் வலம்புரி நாளிதழ் துன்பம், துயரம் வேதனைகள் அனைத்தின் மத்தியிலும் தமிழ் மக்கள எதிர்காலத்தை தனது பணியால் சமாதானம், அமைதி, ஒளிமிக்க வாழ்வு என்பவற்றிற்கு அழைத்துச் செல்ல, துணிவோடு, உறுதியோடும் பணியாற்ற இறை உனது ஆசியை வேண்டிநிற்கின்றேன் என்றார்.

### துர்க்கா துரந்தரி செல்வி தங்கமமா அப்பாக்குட்டி தனது ஆசியுரையின் போது;

வலம்புரி நிறைவான செல்வத்தைக் குறிக்கும் ஒரு சின்னம்; ஆலயங்களிலே வீடுகளிலே வலமபுரி இநந்தால் ஒரு நிறைவு அந்த வகையிலே இனறு வலம்புரியை நாம் வாழ்ததுகிறோம்

யாழ்ப்பாண மண் யுத்தம், பதற்றம மற்றும பல்வேறு அனர்ததங்களால் நிறைந்து புணபட்ட பூமியாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. இம மண்ணுககு விடிவு ஏற்பட்டு,அந்த விடியலிலேஒட்டுமொத்த சமுதாயமுமநிமமதியாக,சந்தோஷமா வாழ வழி சமைபபதில் பத்திரிகையின பணி இனறியமையாததும், மகத்தானதுமாக உளளது.

### பத்திரிகையாளரின்பேனா

படை வீரர் கையிலிருககும் வாளை விட பத்திரிகையாளன் கையிலிருக்கும எழுதுகோல் மிகுந்த வலிமையுடையது அந்த வகையில் பததிரிகையானது கண்ணியமான செய்திகளை வெளியிட்டு நீதிநெறி நின்று நடுவு நிலைமை தவறாது மக்களது நம்பிக்கைக்குப் பாத்திரமான உண்மையான செய்திகளைத் தாங்கி வரும் ஓா சருவியாக விளங்க வேண்டும்.

அந்த வகையில் ,எழுதுகோலைப் பக்கம் சாரவிடாது எமது உள்ளத்தைத் தொடுகின்ற 'இன்று ஒரு தகவல்' உளளிட்டபல்வேறு தகவல்களைத் தாங்கி வருகின்ற வலம்புரியை வாழ்த்துகிறேன்.

வலம்புரி நீண்டு நிலைக்க வேண்டும் தொடர்ந்துவெளிவர வேண்டும் அதற்கு இறைவன் திருவருள் துணைபுரிய வேண்டும் என்று வாழ்த்துகிறேன் என்றார். (ச)

### வலிகாமம் மேற்கில்,

# டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் சுகாதாரப் பிரிவினர் பாராமுகம்

(ஈச்சமோட்டை)

வலிகாமம் மேற்கு வட்டுக் கோட்டை, மாவடி, சங்கரத்தை, சித்தன்கேணி பகுதிகளில் மலேரியா, டெங்கு, நெருப்புக் காய்ச்சல் போன்ற உயிர் கொல்லி நோய்களின் தாக்கம் அதிகரித்திருப்பதாக தெரியவந்துள்ளது.

இடம்பெயர்ந்த தென்மராட்சிப் பகுதி மக்கள் பலர் இப்பகுதிகளில்முகாம்களிலும் வீடுகளிலும் நெருக்கமாக வசித்து வருவதால், இந்நோயின் பரவு தன்மை மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், மேற்படி நோயின் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் வகையிலான முன்னெச்சரிக்கை நடவடிக்கைஎதனையும் பொதுச் சுகாதார பரிசோதகர்களோ அன்றி வேறுபொது அமைப்புகளோ இதுவரை முன்னெடுக்காமை, நோயின் பரவலை மேலும் ஊக்கப்படுத்தலாம் எனவும் கருதப்படுகிறது

இதேசமயம், குடாநாட்டின் ஏனைய பல பாகங்களில் பொது சுகாதார பரிசோதகர்களுடன் இணைந்து ஏனைய பல்வேறு அமைப்புகள் மலேரியா, டெங்கு. நெருப்புக்காய்ச்சல் ஒழிப்பில் தீவிரமாய் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(உ-59)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# யாழில் உயர் நீதிமன்றம் ஜனவரி முதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உயர் நீதிமன்றம் இயங்குவதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

யாழ். உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமனம்பெற்றுள்ள கே. பி. எஸ். வரதராசா நீதிமன்றம் தொடர்பான அமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ் நகரப்பகுதியில் உயர் நீதிமன்றத்தை இயக்குவதற்கான இடத்தைத் தெரிவுசெய்வதற்கு, இன்று யாழ் சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

சுமார் 14 வருடங்களின் பின் யாழ்ப்பாணத்தில் உயர் நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளதால் இந்த நீதிமன்றத்தின் ஆளணி தொடர்பாக கொழும்பில் ஆலோசனை நடத்தப்படவுள்ளதாகவும் ஜனவரி இறுதிப் பகுதியில் வழக்கு விசாரணைகள் ஆரம்பிக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(வ-12)

# இருபாலையில் ஷெல் மேலும் ஒருவர் காயம்

(இருபாலை)

இருபாலை கிழக்குப் பகுதிகளில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில்வீழ்ந்துவெடித்த ஷெல்லினால் நித்திரையில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இருபாலை கிழக்கைச் சேர்ந்த சேதுநாதன் நடராஜா (வயது 61) என்பவரே காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

அதிகாலை வேளையில் பரவலாக. இப்பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் நிலவியதுடன், பல குடும்பங்கள் இரவோடிரவாக அப் பகுதியை விட்டு வெளியேறியதையும் காணக்கூடியதாக இருந்தது. (இ)

# புலிகள் பதில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வான்படைக்குச் சொந்தமான மிக்ரக யுத்த விமானம் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் யாழ் குடாநாட்டு வான்பரப்பில் தாழப்பறந்து மூன்று தடவைகள் குண்டுகளைவீசிதாக்குதல் நடாத்தியது.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் விமானத்தை நோக்கி பதில் தாக்குதல் தொடுத்தனர்.

(வ-12,59,110)

---

### யுத்த நிறுத்த..:

யில; விடுதலைப் புலிகளின் இவ்யுத்த அறிவிப்பு சந்தேகத்துக்கிடமானது, ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. இது புலிகள் கட்டம் கட்டமாக, அரசை தம்பக்கம் இழுத்துக்கொள்ளவே மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் இவ்யுத்த நிறுத்தம் புலிகளின் வேலைத் திட்டங்களின் ஒரு அங்கம். இதனை பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கருத முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

---

### யுத்த

சிங்க தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பு தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் அரசும் விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்தம் செய்ய வேண்டுமென நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். இந்நிலையில் நத்தார் புதுவருடம், தைப் பொங்கல் ஆகிய முக்கிய தினங்களை உள்ளடக்கியதான புலிகளின் யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்கச் செய்து, தொடர்ந்தும் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்கும் வழிவகைகள் அரசினால் மேற் கொள்ளப்பட வேண்டுமெனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(வ)

---

### புலிகளின்...

யின் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்போர் நிறுத்தம் உண்மையான போர் நிறுத்தமாகக் கடைப்பிடிக்கப்படுமென்று நான் நம்புவதாகவும் தமிழர்கள் உட்பட அனைத்து சமூகத்தினரதும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதும்- அத்துடன் இலங்கையின் நில இறையாண்மையை நிலைநாட்டுவதுமான தீர்வுக்கேபிரித்தானிய அரசாங்கம் ஆதரவு வழங்குமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

---

# இரண்டு விமான சேவை

(யாழ்ப்பாணம்)

இன்றும் நாளையும் இரு விமான கேவைகள் இடம் பெறுமென றான் இனைப் பாளர் எஸ குகராஜன் அறிவித்துள்ளார். (ந)

---

### சமாதானத்தின-..

உறுப்பினருமான அ. விநாயமூர்த்தி புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பையடுத்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு யுத்தநிறுத்தம் அத்தியாவசியமானது என நாம் பல தடவைகள் அரசுக்கு எடுத்துக் கூறியிருந்தோம். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனது யுத்த நிறுத்த அறிவிப்பும், அவரது மாவீரர் தின உரையும் ஒரு நல்லெண்ண சமாதான பேச்சுவார்த்தைக்கான சமிக்ஞையாக இருப்பதால் அரசாங்கமும் இதய சுத்தியுடன் யுத்த நிறுத்தத்திற்கான அறிவிப்பை விடுக்க வேண்டுமென அரசை கேட்டுள்ளார் [வ]

---

### காணாமல்...

தொடர்பாககாணாமல் போனவர்களின் உறவினர்கள் யாழ்மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளரும் பாராளுமன்றஉறுப்பினருமான கே.வி. குகேந்திரனிடம் தெரிவிக்கப்பட்டது இதனையடுத்து பலாலிபடைத்தள உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பானவிபரங்களை தெரிவிக்குமாறு பாராளுமன்றஉறுப்பினர் கே.வி.குகேந்திரன்கோரினார்இதையடுத்து படைத்தரப்பு இதுதொடர்பான விபரத்தை ஆராய்ந்து தகவல்வெளியிடுவதாக உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ

---

# நீதிமன்றம் விடுவித்தபோதும் சிறையில் வாடும் 6 கைதிகள்

## தொல்லை தவிர்ப்புக் குழுவிற்கு முறையீடு

(மட்டக்களப்பு)

பயங்கரவாத, அவசரகால தடைச்சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விடுதலை செய்யப்பட்ட நிரபராதிகள் ஆறுபேர் தொடர்ந்தும் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தொல்லைதவிர்ப்புக்குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைப் பொலிஸால் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 4ந் திகதி கைதுசெய்யப்பட்ட எஸ். சுதர்சன் 5-2-2000 ம்அன்றும் புங்குடுதீவு கடற்படையினரால் 20-7-99ல் கைதுசெய்யப்பட்ட கார்த்திகேசு தில்லைரூபன் 9- 6- 2000 ம் அன்றும், யாழ்ப்பாணம்512ம் படைப்பிரிவால் 2- 11- 99 ல் கைதுசெய்யப்பட்ட எஸ். கமலேஸ்வரன் 13-6-2000 ம் அன்றும், மட்டக்களப்பு ராசிக் குழுவால் 19-11-99ல் கைதுசெய்யப்பட்ட யோகநாதன் ராஜஸ்காந்தன் 20-10-2000 ம் அன்றும்' யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் 28-9-99 ல் கைது செய்யப்பட்ட தேவநாயகம் ரொனால்ட் தேவசுதன் 20-6-2000 ம் அன்றும், யாழ்ப்பாணப் பொலிஸாரால் 2-11-99 ல் கைதுசெய்யப்பட்ட சிவலிங்கம் கமலேஸ்வரன் 13-8-2000 ம் அன்றும் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

எனினும் மேற்படி நபர்கள் தொடர்ந்தும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக நேற்றுலக்ஸ்மன் ஜெயக்கொடி தலைமையில் நடைபெற்ற தொல்லை தவிர்ப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதேவேளை மேற்படிநபர்களைதடுத்துவைத்திருப்பதற்கானகாரணத்தைதெரிவிக்க, எதிர்வரும் 8 ம் திகதி நடைபெறும் தொல்லை தவிர்ப்புக் குழுக் கூட்டத்தில், சமுகமளிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், களுத்துறைச்சிறைசாலை அத்தியட்சகர், நீதிச் சேவை ஆணைக்குழு அதிகாரிகள் ஆகியோருக்கு அழைப்புவிடுக்கப்பட்டுளளது. (இ)

---

### வீண்...

குப் பின் இத்தகைய ஒருயுத்த நிறுத்த நிலைப்பாட்டை விடுதலைப்புலிகள் அறிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தஅறிவிப்பு தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும்யாழ் மாவட்ட பாராளுமன்ற எம்.பி.யுமான வீ. ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்; விடுதலைப் புலிகள்ின் யுத்த நிறுத்த அறிவிப்பு தொடர்பாக அரசாங்கம் இவ்வறிவிப்புக்கு வீண் விமர்சனங்கள் செய்யாமல் இச்சந்தர்ப்பை பயன்படுத்தி நல்லதொரு முடிவை எடுக்க வேண்டுமெனவும், விடுதலைப்புலிகள் நிபந்தனையற்ற பேச்சிற்கு வந்திருப்பதனாலும் அரசாங்கம் திறந்தமனதுடன் யுத்த நிறுத்தத்தை அறிவித்து தொடரும் யுத்திற்கு முடிவு கட்ட வேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார். (வ)

ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
சேது புகழ்விக்ரம்
பானுப்பிரியா
நடித்த
கண்டேன்
சீதையை
புதியவெளியீடு
10.30,2-30
[கி-688]

# இ.தொ.காங்கிரசும் வரவேற்றுள்ளது

(கண்டி)

தமிழீழ விடுதலைப்புலிகள் ஒரு மாதகால யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். இதுவரவேற்கக்கூடிய தொன்றாகும் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்தது போல அரசும் யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரமுகரும் மத்திய மாகாண தமிழ் கல்வி கைத்தொழில் இந்து கலாச்சார அமைச்சருமான எஸ். ராகாகிருஷ்ணன் கருத்து வெளியிட்டுள்ளார்.

புலிகளின் யுத்த நிறுத்தம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தநிறுத்தத்தின் மூலம் நாட்டில் சமாதானம் ஏற்பட்டால் அது சந்தோசமாக இருக்கும், சமாதானம் என்ற பேச்சை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வரவேற்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். (வ)

# புலிகளின் அறிவிப்புக்கு செல்வம்எம்.பி வரவேற்பு

(மன்னார்)

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பு வரவேற்கக்கூடியது இதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் வெறுமனேகாலம் தாழ்த்தாது உரியமுக்கியத்துவம் கொடுத்து அரசாங்கமும் யுத்தநிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் இவ்வாறு ரெலோ வின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

# திருமலையில் தாக்குதல் 5 படை பலி; மூவர்காயம்

[திருகோணமலை]

திருகோணமலை சலப்பை ஆற்றுப்பகுதியிலிருந்து சென்ற கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில்5 கடற்படையினர் கொல்லப்பட்டும், மூவர் படுகாயம் அடைந்துமுள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவம் நேற்றுக்காலை 7 40 மணியளவில் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### ஒரு மாத..

வரை எந்தவிதமான இராணுவ நடவடிக்கையும் எடுக்கக் கூடாது எனவும், நத்தார், புதுவருடம், தைப் பொங்கல் போன்ற தினங்களில் சமாதானத்தைப்பேணுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

இது போன்றுஅரசும் தனது ஆயுதப்படைக்கு உத்தரவு பிறப்பிக்கும் எனவும் எதிர்பார்க்கின்றோம்.

எமது யுத்த நிறுத்த முடிவானது நல்லெண்ண வெளிப்பாடாகவும் சமாதானத் தீர்வில் எமக்குள்ள ஆர்வத்தை எடுத்துக்காட்டுவதாகவும் இருக்க வேண்டும். போர் நெருக்கடியைத் தவிர்த்து இயல்பு நிலைமையையும், சமாதான சூழ் நிலையையும் உருவாக்கும் நோக்குடனேயே இந்த சமாதானத்திற்கான பாதையைத் திறந்திருக்கின்றோம்.

யுத்தத்திற்கு தற்காலிக ஓய்வு கொடுக்கும் எமது நல்லெண்ண முயற்சியை சிறிலங்கா அரசு ஏற்றுக்கொண்டு நோர்வே அரசின் யோசனைகளை நடைமுறைப்படுத்துமாயின் ஓர் நிலையான போர் நிறுத்தத்திற்கும், நேரடிப் பேச்சிற்கும் வழிகோலும் வகையில், மேலும் இப் போர் நிறுத்த காலத்தை நீடிக்கவும் நாம் தயாராக இருக்கிறோம் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ம)

---

### யுத்த நிறுத்த அறி..

ளுக்கு எப் பயனும் விளையப் போவதில்லை.

இவ்வாறு ஈ.பி.டி.பி யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராஜா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் ஒரு மாதகால யுத்த நிறுத்தஅறிவிப்பு தொடர்பாகவே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் புலிகளால விடுக்கப்பட்டுள்ள யுத்த நிறுத்த அறிவிப்பானது சமாதானத்தை நோக்கியதல்ல அதற்கு வேறோர் உள்நோக்கும் உள்ளது

அவர்கள் சமாதானத்தை விரும்புபவர்களாயின், அவர்களது கடந்தகால நடவடிக்கைகள் மக்கள் நலன் சார்ந்ததாக அமைந்திருக்கும்.

அறியும் இன்றைய யுத்த நிறுத்த அறிவிப்பு இதய சுத்தியுடையதானதல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

---

இப்பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் [illegible] அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.